பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 28 வெள்ளிக்கிழமை (10.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :75

# யுத்தநிறுத்த ஒப்பந்த விதிகள்

## அமுலாக்கம் குறித்து மட்டுமே பேச்சு என்கின்றனர் புலிகள்

கொழும்பு,பெப்ரவரி10

"ஜெனீவாவில் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுகளின்போது தற்போதைய யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளை செம்மையாக நடைமுறைப்படுத்துவது பற்றி மட்டுமே பேசப்படும். அதற்கு அப்பால் எந்த விடயமும் பேசப்பட மாட்டாது. ஜெனீவாப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் அதுதான்."

- இப்படி திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றனர் விடுதலைப் புலிகள்.

ஜெனீவாப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை பகிரங்கப்படுத்துமாறு இலங்கை அரசை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கோரியிருப்பது குறித்து கருத்துக் கேட்டபோதே புலிகளின் தலைமையுடன் தொடர்புடைய வட்டாரங்கள், புலிகளின் தலைமையின் நிலைப்பாட்டை இவ்வாறு வெளிப்படுத்தின.

ஜெனீவாப் பேச்சுகளின்போது, 'மனித

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அர்த்தமுள்ளதாக அது அமைவது குறித்தே பேச்சு என்கின்றது அரசு

கொழும்பு, பெப்ரவரி 10

எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுகள் அர்த்தமுள்ள போர்நிறுத்த ஒப்பந்தம் என்ற அடிப்படையைக் கொண்டிருக்குமென்று அரசாங்கம் நேற்று அறிவித்திருக்கிறது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போது அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை தகவல், ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா அறிவித்தார்.

பேச்சுக்கான அரச குழு சிரேஷ்ட அமைச்சரும், சட்டவாதியுமான நிமல் சிறிபால டி சில்வாவை தலைவராகவும் இதர அனுபவம் வாய்ந்த அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, ரோஹித்த போகொல்லாகம ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டிருக்குமெனவும் அமைச்சர் கூறினார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

கருத்தாடலுக்கான விவாத அரங்குக்கு வராமல்

# தமிழர் பிரச்சினையைப் புரிந்துகொண்டு ஜெனீவாப் பேச்சுகளுக்கு வாருங்கள்

அரச பிரதிநிதிகள் குழுவுக்குத் தமிழ்ச்செல்வன் வேண்டுகோள்

கிளிநொச்சி,பெப்.10

"தமிழர்கள் படும் கஷ்ரங்கள், அவர்களின் பிரச்சினைகள், அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கெடுபிடிகள் போன்றவற்றைப் புரிந்துகொண்டு ஜெனீவாப் பேச்சுக்கு வாருங்கள்".

- இப்படி பேச்சுகளில் பங்குபற்றும் அரச பிரதிநிதிகள் குழுவுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

கருத்தாடல் புரியும் விவாத அரங்குக்கு வருகின்றவர்களாக அல்லாமல் உண்மையாகப் பேசி, நியாயமான தீர்வைக் காணும் எண்ணத்தோடு வாருங்கள் என்றும் அவர் கோரியிருக்கின்றார்.

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம்செய்த நோர்வேத் தூதுவர்



ஹான்ஸ் பிரட்ஸ்கர், சுவிஸ் தூதுவர் பேமர்டினோ ரொகோஸோனி ஆகியோரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சியில் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் 22, 23 ஆகிய திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறும் அமைதிப் பேச்சுகளில் பங்குபற்றுவதற்காகச் செல்லுகின்ற புலிகளின் குழுவின் ஏற்பாடுகள் குறித்து நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் தமிழ்ச்செல்வன் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு:-

கே:- இன்றைய சந்திப்பு தொடர்பாக? (14 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

## யாழ். மாவட்டத்தில் 5 கட்சிகள் களத்தில்!

யாழ்ப்பாணம்,பெப்.10

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் 5 கட்சிகள் களத்தில் குதிக்கத் தயாராகி இருக்கின்றன. அவற்றில் இரண்டு முஸ்லிம் கட்சிகள்.

இதற்கான முன்னேற்பாடாக தமது தேர்தல் மாவட்டப் பிரதிநிதிகளை அக்கட்சிகளின் செயலாளர்கள் நியமித்துள்ளனர்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.), தமிழீழ விடுதலைக் கழகம் (புளொட்) ஆகியன தமது பிரதிநிதிகளை நேற்று நியமித்தன.

இவற்றில் இரு முஸ்லிம் கட்சிகளும் யாழ். மாநகர சபைக்கு போட்டியிடுவதற்கு மட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாவில் பழைய கோட்டையில் பேச்சு

கொழும்பு, பெப்.10

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுகள் ஜெனீவா நகரின் மையத்தில் நடைபெறா. அதற்குப் பதிலாக நகரின் மையத்திலிருந்து சுமார் இருபது கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள பழைய கோட்டை ஒன்றுக்குள் உள்ள முற்கால அரண்மனை ஒன்றில்அது நடைபெறும் எனத் தெரியவருகிறது.

இந்த தொன்மை மிகுந்த கோட்டை நவீன முறையில் அலங்கரிக்கப்பட்டு புதிய வடிவத்தில் சர்வதேச மாநாடுகள், உயர் மட்டச் சந்திப்புகள் போனறவை நடைபெறக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகினறது.

அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பு பிரதிநிதிகள் குழுவும் ஜெனீவாவின் மையத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்பட்டு இரண்டு நாளும் பேச்சுகளுக்கான இந்தப் பழைய கோட்டை அரண்மனைக்குக் கூட்டிச் செல்லப்படும் எனத் தெரியவருகின்றது.

(க-3)

## உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு செயலகத்துக்கு பலத்த பாதுகாப்பு

தற்காலிக பொலீஸ் அலுவலகமும் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.10

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும் பணி நேற்று வியாழக்கிழமை நாடு முழுவதிலும் ஆரம்பமானதைத் தொடர்ந்து யாழ்.செயலகத்திற்கு பலத்த பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நேற்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஏற்கப்படவுள்ளன.

இதனையடுத்து யாழ்.அரச செயலகப் பாதுகாப்பிற்கென அங்கு தற்காலிக பொலீஸ் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அரச தகவல் திணைக்கள அலுவல கப்பகுதியில் இந்தத் தற்காலிக பொலீஸ் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு சுமார் 20 இற்கும் மேற்பட்ட பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி முயற்சிகளை முன்னெடுக்க 'செயல் ஊக்குவிப்புக்குழு அமைப்பு'

கொழும்பு,பெப்.10

விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுகளை வலுவான முறையில் முன்னெடுப்பதற்காக அமைதி முயற்சிகளுக்கான செயல் ஊக்குவிப்புக் குழுவொன்றை (STEERING COMMITTEE ON PEACE BUILDING) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை தலைவராகக் கொண்ட இந்தக்குழு அமைதிப் பேச்சுகளில் நேரடித் தொடர்புகளை கொண்டிராத போதிலும் அமைதி முயற்சிகளுக்குத் தேவையான தொடர்பாடல்களைக் கொண்டிருக்கும் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது இந்தத் தகவலை வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியதாவது :-

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நோர்வே, சுவிஸ் தூதுவர்களுடன் விடுதலைப் புலிகளின் குழு நேற்று சந்தித்தபோது...

# யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளராக டாக்டர் ஞானசோதி பதவி ஏற்றார்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக டாக்டர் எஸ்.ஞானசோதி உத்தியோகபூர்வமாக நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கடந்த இரண்டு வருடங்களாக பணிப்பாளர் பதவி வெற்றிடமாகவே இருந்துவந்தது. பதில் பணிப்பாளராக டாக்டர் எஸ்.ரவிராஜ் கடமையாற்றி வந்தார்.

சுகாதார அமைச்சு தற்போது புதிய பணிப்பாளராக டாக்டர் எஸ்.ஞானசோதியை நியமனம் செய்துள்ளது.

நயினாதீவை சொந்த இடமாகக்கொண்ட இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் 1982 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வைத்தியராகக் கடமையாற்றியுள்ளார்.

கொழும்பு டி சொஸ்ஸா மகப்பேற்று வைத்தியசாலையில் இருந்தே இவர் மாற்றம் பெற்று இங்கு வந்துள்ளார்.(3-12-14-139)

# வடமராட்சியைச் சேர்ந்தவர் டென்மார்க் விபத்தில் மரணம்

வடமராட்சி, பெப்.10

டென்மார்க்கில் நடைபெற்ற வீதி விபத்து ஒன்றில் வடமராட்சியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் அம்பன், குடத்தனையைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான வல்லிபுரம் திருநாவுக்கரசு (வயது 66) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக டென்மார்க்கில் குடும்பத்தினருடன் வசித்து வந்த இவர் அங்குள்ள நகரம் ஒன்றின் பிரதான வீதியைக் கடக்க முயன்றபோது எதிரே வந்த கார் ஒன்று மோதியதாலேயே பலியானார் என்று தெரிவிக்கப்பட்டது. (3-6-173)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆண்டுவிழாவும் பொருள் காட்சியும்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆண்டுவிழாவும் பொருள் காட்சியும் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை கொக்குவிலில் உள்ள சங்கத்தின் மண்டபத்தில் கண்காட்சி இடம்பெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக மீளமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட பிரதிநிதி திருமதி கமலா சிவசிதம்பரம் கலந்துகொள்வார்.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் நடைபெறவுள்ள ஆண்டுவிழா நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் சிறப்பு விருந்தினராக யூனியன் அஷ்யூரன்ஸின் யாழ்.பிராந்திய முகாமையாளர் சி.ந.மதிவதனனும் கலந்துகொள்வர். (3-202)

# முதுகலைமாணி கற்கைநெறி 50 பேர் அனுமதிக்கு தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் பிரதேசத் திட்டமிடல் கற்கைகளுக்கான பட்டப்பின் முதுகலைமாணி கற்கைநெறிக்கான நேர்முகத் தேர்வில் சித்தியடைந்து அனுமதிக்கு தெரிவான 50 பேரின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் கடந்த மாதம் 16ஆம் திகதி முதல் 4 தினங்கள் இடம்பெற்றன.

சித்தியடைந்தவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் -

தமது பதிவுகளை உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் இம்மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் - உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி கே.கந்தசாமி தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த 50 பேரின் பெயர் விவரம் வருமாறு:-

கிறிஸ்தோபர் அன்ரன் மோகன்ராஸ், தங்கராஜா அருணகிரிராஜா, துரைசிங்கம் அதியமான், ரட்ணசர்மா சந்திரசேகரசர்மா, கவிதா ஜீவகன், குமாரசுவாமி ஜெயக்குமார், குலசேகரம்பிள்ளை கருணாநிதி, சிவசுவாமி கிருபாகரன், குமாரசுவாமி கோகுலன், செல்வி கேதினி குகராஜன், செல்வி மணிமேகலை குமாரசுவாமி, திருநாவுக்கரசு மகேஸ்வரகுமார், கந்தையா மகேஸ்வரன், குணநாயகம் மகிழ்ச்சிகரன், செல்லையா மனோகரன், சரவணபவான் மோகனபவான், ரஞ்சிதமலர் மோகனேஸ்வரன், செல்வி வனஜா நடராஜா, சிவசாமி பகீரதன், கதிரதலை நாதன் பரந்தாமன், இராசையா பத்மாந்தன், சபாலிங்கம் பிலிப் அமலராசா, பரம்சோதி பிரபாகர், மருதலிங்கம் பிரதீபன், செல்வி விமலா பொன்னு.

சவெரி பூலோகராஜா, இளையதம்பி பிரேமராஜன், தம்பையா புவனேந்திரம், சி.ஆசைப்பிள்ளை இரகுநாதன், கதிரவேலு இராசையா, செல்வி எம்.என்.ஏ.செல்வகுமாரி சாமிநாதர், சின்னத்தம்பி சண்முகநாதன், அஞ்சலிதேவி சாந்தசீலன், மேரி ஜோசெப் சாந்தசீலன், நடராஜா சர்வேஸ்வரன், சிவலிங்கம் சத்தியசீலன், பாலசிங்கம் செந்தில் நந்தனன், சுப்பிரமணியம் சிவகுமரன், தேவரஞ்சினி சிவாஸ்கரன், செல்வி துஸ்யந்தி சோமநாதன், கிரிஸ்ணர் சிறிபாஸ்கரன், துரைராஜா சுபோகரன், நல்லையா சுதேஸ்குமார், வாசுகி தவபாலன், நடேசு தயாளன், சுகுணரதி தெய்வேந்திரம், கந்தையா தெய்வேந்திரம், மேரியூலியா துஸ்யந்தன், ரூபா உதயரட்ணம், பிரான்ஸ் சேவியர் அன்ரன். (3-12-14)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவின் 137 ஆவது சொற்பொழிவு இன்று பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் மணி மண்டபத்தில் இடம்பெறும்.

அபிவிருத்தி உதவியாளர் சி.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் தலைப்பில் சைவ[illegible] சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (3-202)

## திருமறைக் கலாமன்றத்தின்

# கலைத்தூது அழகியல் கல்லூரி நாளை கோலாகல ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.10

அழகியல் கலைகளின் வளர்ச்சி கருதி திருமறைக் கலாமன்றத்தால் ஆரம்பிக்கப்படும் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஆரம்ப வைபவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைக் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேசும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வி.நித்தியானந்தன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறைத் தலைவர் செல்வி பாக்கியலட்சுமி நடராஜா, நடனத்துறைத் தலைவர் திருமதி கிருஷாந்தி ரவீந்திரா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அழகியல் கலைகளுக்காக 1988 ஆம் ஆண்டு முதல் திருமறைக் கலா மன்றத்தினால் நடத்தப்பட்டு வந்த கவின் கலைகள் பயிலகமே இவ்வாண்டு முதல் கலைத்தூது அழகியல் கல்லூரியாக விரிவாக்கம் பெற்று நிரந்தரக் கட்டடத்தில் இயங்கவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கலைத்தூது அழகியல் கல்லூரியில் பிரதான பாடங்களாக வாய்ப்பாட்டு, பரதம், கதகளி, வீணை, வயலின், கிற்றார், ஓகன், புல்லாங்குழல், மிருதங்கம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் என்பனவும் சிறப்பு பாடங்களாக கூத்து, கண்டிய நடனம், சினிமாவும் தொழில்நுட்பம் என்பனவும் கற்பிக்கப்படவுள்ளன. விரைவில் இன்னும் பல புதிய பாடங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-190)

## பரிசில் நாள்

தென்மராட்சி,பெப்.10

வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய பரிசில்நாள் விழா இன்று முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் சு.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக கரவெட்டிக் கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணரும் கலந்துகொள்வர். (3-117)

## ராதிகாவுக்கு ஐ.நாவில் உயர் பதவி

கொழும்பு,பெப்.10

இராணுவ வன்முறைகளால் பாதிக்கப்படும் சிறுவர்கள் நலன்களைக் கவனிக்கும் ஐ.நாவின் விசேட பிரதிநிதியாக ராதிகா குமாரசுவாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.நாவின் செயலாளர் நாயகத்துக்கு அடுத்தபடியாக மூன்றாவது நிலையில் உள்ள இந்தப் பதவிக்கு ராதிகா நியமனம் பெற்றுள்ளார். பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் குறித்து அறிக்கையிடும் பதவியை முன்னர் ராதிகா வகித்து வந்தார்.

தற்சமயம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவராகப் பணியாற்றி வருகிறார். (3)

## அடையாள அட்டை படிவம் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.10

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்கள் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்களை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று சாவகச்சேரிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் 19ஆம் திகதிகளில் நாடுமுழுவதும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. இதற்கு வசதியாக விண்ணப்பப்படிவங்களைப் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (3-202)

## மெய்வன்மைப் போட்டி

வலி.மேற்கு பெப்.10

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.சண்முகசுந்தரமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்டச் செயலக மனித வள அபிவிருத்தி உதவிச் செயலாளர் கே.கனகரத்தினம், யாழ் மாவட்ட [illegible] பிரதிச் செயற்றிட்டப் பணிப்பாளர் கே.நவரட்ணராஜா ஆகியோரும் கலந்துகொள்வர். (3-29-175)

## குருபூசை

தென்மராட்சி,பெப்.10

சாவகச்சேரி பெரியமாவடி வித்தக நிலையத்தில் இன்றும் நாளையும் குருபூசைகள் இடம்பெறவுள்ளன.

இன்று சச்சிதானந்த சுவாமிகள் குருபூசையும், நாளை வடலூர் வள்ளலார் சுவாமிகள் குருபூசையும் நடைபெறும். (3-117)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.10

சண்டிலிப்பாய் கல்வளை சாமுண்டேஸ்வரி சமேத வைரவப் பெருமான் ஆலயத்தின் கும்பாபிஷேக பூர்த்திவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

மகேஸ்வர பூசையும் இடம்பெறும். பிற்பகல் 4 மணியளவில் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (3-13)

* * *

சுழிபுரம் நெல்லியான் வீதியில் புதிதாக புணருத்தாரணம் செய்யப்பட்ட நாகதம்பிரான் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கோயில் மண்டபம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பிரதம சிவாச்சாரியராக பிரம்மஸ்ரீ.ச.நித்தியானந்தக் குருக்கள் கிரியைகளை நடத்து வார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரன்டு தினங்கள் மண்டாலபிஷேகம் நடைபெறும். (3-28)

* * *

வடமராட்சி, பெப்.10

தும்பளை லூர்துமாதா யாத்திரைத்தலத்தின் திருவிழா நாளை நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நற்கருணை ஆராதனையும் நாளை சனிக்கிழமை காலை கூட்டுத்திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (3-173-202)

* * *

அரியாலை. பெப்.10

நீர்வேலி கந்தசாமி கோயிலில் நாளை சனிக்கிழமை தைப்பூசத் திருவிழா நடைபெறும். அன்றைய தினம் காலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று பிற்பகல் 4 மணிக்கு முருகப்பெருமான் வீதியுலா வருவார். (3-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஜெனீவாப் பேச்சு பயன்தரா விட்டால் அமைதி முயற்சிகள் தோற்றுப் போகும்

எதிர்வரும் 22ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள அமைதிப் பேச்சுகளின் நிகழ்ச்சி நிரலை உடனடியாக வெளியிட வேண்டுமென்று அரசுத் தலைமையிடம் ஐக்கிய தேசியக் கட்சி அவசர கோரிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

"விடிய விடிய இராமாயணம். விடிந்த பின்னர் இராமன் சீதைக்கு என்ன முறை என்று கேட்டார்களாம்." - என்ற மாதிரி இருக்கின்றது ஐ.தே.கட்சியின் இந்தக் கோரிக்கை.

அமைதி முயற்சிகளைக் குழப்புவதற்கான 'குசும்பு' வேலைகளுக்கு பிள்ளையார் சுழி போடும் விவகாரமாகவே இது தொடர்பான ஐ.தே.கட்சி அறிக்கையை நோக்க வேண்டியிருக்கின்றது.

"யுத்த நிறுத்தத்துக்கு வழி செய்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் விதிகளை - ஷரத்துக்களை - செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்து மட்டுமே பேச்சு." - என்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் செய்தியாளர் மாநாட்டில் வைத்து பகிரங்கமாக அறிவித்துத் தெளிவுபடுத்தியுள்ளார். அதுவும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் நோர்வே அனுசரணைக் குழுவின் பொறுப்பாளரும், அந்த நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்முக்கும் இடையில் கிளிநொச்சியில் நடைபெற்ற பேச்சுகளை அடுத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

போர்நிறுத்த விதிகளை செம்மையாக நடைமுறைப் படுத்துவது குறித்து பேசுவது ஒன்றே நிகழ்ச்சி நிரல். பெப்ரவரி 22, 23ஆம் திகதிகளில் அது குறித்து மட்டுமே அரசும், புலிகளும் பேசப் போகின்றார்கள் என்பது சகலருக்கும் தெரிந்த விடயம். அரசுத் தரப்பிலும் கூட அது கோடிட்டுக் காட்டப்பட்டு விட்டது. அப்படியிருக்கையில் ஊடக அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா, எங்கோ கூறிய ஒரு கருத்தை - மயிர் இழையாகப் பிடித்துக் கொண்டு - அதில் தொங்கியபடி புதிய குழப்பம் செய்யப் புறப்பட்டிருக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் தென்னிலங்கையில் பிரசாரப் பிரச்சினைக்கு மைய விவகாரமாக - தொனிப்பொருளாக - அமைந்தது இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டு ஏற்பாடுதான்.

இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டை கிழித்தெறிய வேண்டும், நிராகரிக்கவேண்டும், புதிய உடன்பாடு செய்யப்படவேண்டும் என்றெல்லாம் சிங்களப் பேரின வாதிகள் கூச்சலிட்டனர். ஏன் இன்று ஜனாதிபதியாகி இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ கூட தனது தேர்தல் பிரசார மேடைகளில் அப்படித்தான் கூறி வந்தார். (அப்போது) பிரதமராக இருக்கும் தாம் கூட கிளிநொச்சிக்குச் சுதந்திரமாகச் செல்வதற்கு இடமளிக்காமல் தடுக்கும் இந்த யுத்த நிறுத்த உடன்பாடு அவசியம்தானா என்று அப்போது அவர் கேள்வி எழுப்பவும் தவறவில்லை.

அந்தப் பிரசார சமயத்தில் அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்ன கூறினார்?

"யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தவறு ஏதுமில்லை. அதை செம்மையாக நடைமுறைப்படுத்தாதமைதான் தவறு. அதை ஒழுங்காக அமுல் செய்யவேண்டும்.

"யுத்த நிறுத்த உடன்பாடு தவறு என்று அரசுத் தரப்புக் கருதுமானால், அதை 14 நாள் முன்னறிவித்தலோடு இல்லாது ஒழிக்கலாம். உடன்பாட்டில் தவறு இருக்கும் என அரசு கருதுமானால் அதைச் செய்து பார்க்கலாமே!" - என்றுதான் ரணில் கூறியிருந்தார்.

ரணில் கூறியபடி யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகளை செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேசவே இப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த முயற்சிகளில் குழப்பம் ஏற்படுத்தாமல் இருப்பதுதான் பொறுப்பான எதிர்க்கட்சியின் கடமையும் செயற்பாடுமாக இருக்க முடியும்.

இலங்கைத் தீவின் எதிர்காலத் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகும் முக்கிய விவகாரமாக ஜெனீவாப் பேச்சுகள் அமையப் போகின்றன.

தற்போது நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் பாதுகாப்பு கள நிலைவரத்தை சீர்செய்து மேம்பாடடையச் செய்யும் வகையில் யுத்த நிறுத்த உடன்பாட்டு ஏற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்தும் ஓர் இணக்க நிலை ஜெனீவாப் பேச்சுகளில் எட்டப்பட வேண்டும். அந்த இணக்க நிலை களத்தில் வேகமாகவும், திறமையாகவும், ஒழுங்காகவும் செயற்படுத்தப்பட வேண்டும். அப்படி நடந்தால்தான் அமைதி முயற்சிகள் அடுத்த கட்டத்துக்கு நகரும். சமாதான வழியில் - யுத்தமின்றி தீர்வு காணும் எத்தனம் - பலன் தரும்.

இல்லையேல், சமாதான முயற்சிகள் படுத்துவிட, யுத்த வழித் தீர்வு தவிர்க்க முடியாததாகி விடும்.

எனவேதான், அமைதி வழியில் தீர்வு காணும் செயற்பாட்டில் ஜெனீவாப் பேச்சுகள் மிக மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன எனச் சுட்டிக்காட்டுகின்றோம்.

அதை எந்த வகையிலும் குழப்பாது, அது வெற்றி பெற முழு ஒத்துழைப்பு வழங்குவது எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் பொறுப்பும் கூட.

இந்த முயற்சி குழம்புமானால் இலங்கைத் தீவு ரணகளமாவதைத் தவிர்க்க முடியாது என்ற யதார்த்தத்தை இலங்கைத் தீவின் மக்கள் அனைவரும் புரிந்துகொள்வது நல்லது.

# ஜப்பான் நிறுவனம் விவசாயிகளுக்கு உழவு இயந்திரங்கள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு கே-75 குபோட்டா ரக இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

ஜப்பான் 'ஜென்' உதவித்திட்டத்தின் கீழ் யாழ்.கமநல சேவைத் திணைக்களத்தின் ஊடாக இவை வழங்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டும் ஜப்பான் 'ஜென்' உதவித்திட்டத்தின் கீழ் 5 உழவு இயந்திரங்கள் தெரிவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன என்றும்-

இம்முறை, கடந்த ஆண்டு உழவு இயந்திரங்களைப் பெற்ற விவசாயிகளின் கமநல சேவை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய கமநல சேவை நிலையங்களின் ஊடாக இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்றும்-

மாவட்ட கமநல சேவைத்திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் கே.சுந்தரேசன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்கென நாடளாவிய ரீதியில் 100 உழவு இயந்திரங்களை கையளிக்க ஜப்பான் 'ஜென்' திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இம்முறை யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த கீரிமலை, உரும்பிராய், அம்பன், தொல்புரம், கைதடி, காரைநகர், புங்குடுதீவு ஆகிய கமநல சேவை நிலையங்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிபந்தனைகளுக்கு உட்பட்டுத் தெரிவுசெய்யப்படும் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உழவு இயந்திரங்கள் வழங்கப்படும். முதலில் 30 ஆயிரம் ரூபாவை முற்பணமாகச் செலுத்திய பின்னர் , 36 மாதங்கள் மாதாந்தக் கட்டணமாக ஏனைய கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

உழவு இயந்திரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயி 5 வருடங்களுக்கு எக்காரணம் கொண்டும் அதனை விற்பனைசெய்யமுடியாது.

இவ்வாறு உழவு இயந்திரத்தைப் பெறத் தகுதியான விவசாயிகள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் உரிய கமநல சேவைத் திணைக்களத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-12-14)

# சிறுவர் பாதுகாப்பு நிறுவன அதிகாரி ஊர்காவற்றுறைக்கு நேற்று விஜயம்

## அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிட

யாழ்ப்பாணம்,பெப்.10

சிறுவர் பாதுகாப்பு - இலங்கை நிறுவனத்தின் உதவியுடன் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களை பார்வையிடவென அந்த நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் நேற்று அங்கு விஜயம் செய்தார்.

சிறுவர் பாதுகாப்பு - இலங்கை நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஜாவியர், நிறுவனத்தின் மாவட்ட திட்ட முகாமையாளர் எஸ்.அசோக்குமார் மற்றும் அதிகாரிகள் நேற்றுக்காலை தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக்கு விஜயம் செய்தனர். தொடர்ந்து, சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியுடன் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து உதவி அரச அதிபர் பணிமனை அலுவலர்களுடன் இவர்கள் கலந்துரையாடினர்.

பின்னர், மேற்படி நிறுவனத்தின் உதவியுடன், உதவி அரச அதிபர் பணிமனைக்குச் சமீபமாக 43 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சிறுவர் விளையாட்டுத்திடல், தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஆகியவற்றின் இறுதிக்கட்ட வேலைகளை இந்த அதிகாரிகள் குழு பார்வையிட்டது.

தொடர்ந்து, தம்பாட்டி பகுதிக்கு விஜயம்செய்த இந்த அதிகாரிகள் பாடசாலை செல்லாத மாணவர்களை பாடசாலை செல்வதற்கு ஊக்குவிக்கும் வகையில் குடும்பத் தலைவிகளின் வருமானத்தை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் சுயதொழில் ஊக்குவிப்பு முயற்சிகளைப் பார்வையிட்டதுடன், பொதுமக்களுடன் சந்திப்பு ஒன்றையும் மேற்கொண்டனர்.

குறிப்பாக, கடற்றொழிலாளர்கள் குடும்பங்களின் இன்றைய நிலை அவர்களின் தேவைகள், சுயதொழில் விருத்திக்காக மேற்கொள்ளக்கூடிய செயற்றிட்டங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் -

எதிர்காலத்தில் இத்தகைய குடும்பங்களுக்கு வழங்கப்படவேண்டிய உதவிகள் குறித்தும் இதில் எடுத்துக் கூறப்பட்டதாக உதவிஅரச அதிபர் பணிமனை அதிகாரி ஒருவர் கூறினார்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபருடன், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உதவியாளர்களும் இந்தச் சந்திப்பில் பங்கு கொண்டனர்.

(எ)

### நாளை

தை 29
சனிக்கிழமை
11.01.2006
திதி: திரயோதசி
காலை: 7.17 வரை
நட்சத்திரம் : பூசம்
தைப்பூசம்
சுபநேரம் : 03.34 - 05.04
ராகுகாலம் :09.34 - 11.04
(யாவும் பழைய நேரப்படி)

# வன்னியில் நடைபெற்ற நடமாடும் சேவையில் ஆவணம் இல்லாத 101 மோ.சைக்கிள்கள் பதிவு

யாழ்ப்பாணம்,பெப்.10

ஆவணமில்லாத மோட்டார் சைக்கிளைப் பதிவு செய்யும் திட்டத்தின்கீழ் கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின்போது ஆவணமில்லாத 101 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் இ.விஜயரத்தின தலைமையில், கொழும்பு மற்றும் யாழ்ப்பாண அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இந்த நடமாடும் சேவையை நடத்தினர்.

இந்த நடமாடும் சேவையில் ஆவணமில்லாத மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டதுடன், 19 புதிய மோட்டார் சைக்கிள்களும் பதிவு செய்யப்பட்டன.

626 பேருக்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. உடைமை மாற்றத்திற்கென விண்ணப்பித்த 91 விண்ணப்பங்களும் கணனி மூலமான சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்த 31 விண்ணப்பங்களும் கொழும்புத் தலைமையலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தத் தகவலை மோட்டார் போக்குவரத்து திணைக்கள யாழ்.அலுவலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -


குடாநாட்டின் பின்தங்கிய பிரதேசமான நெடுந்தீவில் கடந்த வருடம் நடத்தப்பட்ட நடமாடும் சேவை மூலம் 154 பேருக்கு தற்காலிக சாரதி அனு. மதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(எ-202-203)

### உதயவாக்கு

நமது கண்கள் எப்போதும் முன்னோக்கிப் பாயவேண்டும். நமது கால்கள் எம்போதும் முன்னோக்கி நடக்க வேண்டும்.

- நேரு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10-02-06

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில இலங்கை D.A.M பட்டதாரிகள் வைத்திய சங்கத்தின் தலைவரும், பிரபல மருத்துவரும், சமூக சேவையாளருமான

டாக்டர் **கந்தையா நவரத்தினம்**
D.A.M, R.I.M.P (cey.)

அவர்கள் 01.02.2006 அன்று யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டு மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.

டாக்டர் க.தங்கத்தாமரைச்செல்வன்
கதிரவேல் வைத்தியசாலை, அச்சுவேலி.
(சி/47784)(32-16-19)


## ஒரு மணிநேர இலவச சிங்கள வகுப்பு

அடிப்படையான சொற்கள், அமைப்புக்கள், வசனங்கள் மூலம் ஒரே நாளில சிங்களத்தினை கதைக்க கற்றுக்கொள்ளுங்கள்

இடம் : **SAAMSTECH**
233/4, Kasthuriar Rd, Jaffna
( ராஜா திரையரங்கு அருகில் )
காலம் : 11.02.2005 சனிக்கிழமை
காலை 9.00 முதல் 5.00 மணிவரை ஒவ்வொரு மணிநேரமும்

**அனுமதி இலவசம்**
அனைவரும் கலந்துகொள்ளலாம்
கற்கை நெறி வழிகாட்டியும் சான்றிதழும் இலவசம்



FTMS Global — Established since 1986

## STUDY IN SINGAPORE

Singapore Quality Class for Private Education Organisations

**Degree Programmes**
(Com Sce, Com Eng, BIT, BBA, Accounting, Marketing)
**Professional Courses - ACCA, CAT**
(March, April பிரிவுகளுக்கான அனுமதியும், மாணவர் குடிவரவு அனுமதியும் பெற்றுக் கொடுக்கப்படும்.)
Minimum Qualification - GCE (O/L)

கல்லூரிப் பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் சந்திக்க
இடம்: Jaffna MPCS Hall (IT Park அருகில்)
காலம்: 12 ஞாயிறு மாலை 3.00 மணி - 6.00 மணி வரை

CREATE SUCCESS & CONFIDENCE WITH FTMS



தொடர்புகளுக்கு:077 3256575, 077 3164320


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



10.02.2006

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் துணைகொண்டு
**பாஸ்கரன் - லோகநாயகி**
தம்பதியரின் புதல்வன்
*கோபீசனின்*
முதலாவது பிறந்தநாள் வாழ்த்துகள் இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை தனது பிறந்தநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியப்பாமார்கள், பெரியம்மாமார், மாமாமார்கள், மாமிமார்கள், அக்காமார்கள் அனைவரும் கோபீசனை சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

**கோபீசன்**

தகவல்:
**கா.பாஸ்கரன்** (அப்பா).
3ஆம் வட்டாரம்.
நயினாதீவு.
(46553)(42-32-16-19)


## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு

### ஒரு மாதத்தில் பிரயாணம்

★ டோகா, கட்டார், டுபாய்

தச்சுவேலை, மேசன் வேலை, பார்பைண்டர்ஸ், எலக்ரீசியன், பிளம்பர், சாரதி, OFFICE BOY, விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதி சுமப்போர் (PORTERS)

★ மலேசியாவில்

ஆண்/ பெண் இருபாலாருக்கும் பின்வரும் துறைகளில் வேலை வாய்ப்பு
சுப்பர் மார்க்கட், கொம்பியூட்டர் கம்பனி, தையல் வேலை, பொது வேலை, துப்புரவுத் தொழிலாளர், உதிரிப்பாக உற்பத்தியாளர்

தொடர்பு:
**RAINBOW TRAVELS and TOURS**
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777328219, 021 222 3237.
(c/47352) (39.11.42)


## புதிய கட்டடம் மாணவர் பாவனைக்கு

அச்சுவேலி, பெப். 10

அச்சுவேலி மத்திய கல்லூரியில் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடிக் கட்டடம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாணவர்களின் பயன்பாட்டிற்கென திறந்துவிடப்பட்டது.

புதிய கட்டத்தை 'நிக்கொட்' திட்டத்தின் யாழ்.மாவட்ட பிரதிதிட்டப் பணிப்பாளர் கே.நவரத்தினராசா வைபரீதியாகத் திறந்து வைத்தார். (எ-111)

## சச்சிதானந்த சுவாமிகளின் குருபூசைத் தின நிகழ்வு

கைதடி,பெப்.10

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் மகா குருபூசைத்தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை கைதடியிலுள்ள ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளன.

ஆச்சிரமத் தலைவர் ச.வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சமயப் பெரியார்களின் உரைகள் இடம்பெறும். (எ-75)

## இந்துசமயப் பேரவையின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.10

இந்துசமயப் பேரவையின் 'பௌர்ணமி காலச் சிந்தனை - 1' என்னும் நூலின் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்துசமயப் பேரவையின் தலைமைச் செயலகத்தில் முற்பகல் 10 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்துசமயப் பேரவையின் உபதலைவர் ந.தெய்வேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நூல் ஆய்வுரையை பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் நிகழ்த்துவார். (எ-14)

## கொழும்பில் நடைபெறவிருந்த இந்துமன்றத்தின் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப்.10

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி "இலங்கை வாழ் இந்துமகளிர் எதிர்நோக்கும் சவால்களும் பிரச்சினைகளும்" என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாடு பிற்போடப்பட்டுள்ளதாக அகில இலங்கை இந்துமாமன்றம் அறிவித்துள்ளது.

இந்த மாநாடு நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருந்தது குறிப்பிடத்தக்கது.

மாநாடு நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நாடக அரங்கப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.10

அரங்கச் செயற்பாட்டை விரிவுபடுத்தும் நோக்குடன், முன்பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் விருத்திக்கு ஏற்றதான நாடக அரங்கப் பயிற்சி வகுப்புகளை செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தவுள்ளது.

இதன் முதற்கட்டமாக, யாழ்.கல்வி வலயப் பகுதியில் இயங்கும் 150 முன்பள்ளிகளில் கல்வி கற்கும் 300 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இன்று முதல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

கிழமை நாள்களில் மாலை நேரத்திலும் மற்றும் சனி, ஞாயிறு தினங்களிலும் செயல் திறன் அரங்க இயக்கத்தின் அலுவலகத்தில் இந்தப் பயிற்சி நடைபெறும். பயிற்சிக் காலம் நான்கு மாத காலமாகும்.

கற்பித்தலுக்கான அடிப்படைப் பயிற்சிகள், நடிப்புப் பயிற்சி, எழுத்துரு தயாரித்தல், நாடகத் தயாரிப்பு போன்ற பாடவிதானங்கள் இந்தப் பயிற்சியில் அடங்கும். (எ-7)


## இலவச கணனிப் பயிற்சி

*தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் நிர்வாகத்தின் கீழ் இணுவில் கிழக்கு இளைஞர் கழகம் நடத்தும் கணனி வகுப்புகள்.*

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
11.02.2006 - சனிக்கிழமை
பிரிவு I — 9 a.m.
பிரிவு II — 10.30 a.m.

இளந்தாரி கோயிலடி, இணுவில் கிழக்கு.
இணுவில் கிழக்கு இளைஞர் கழகம்.
(46593)(32-16-19)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் சின்னத்தம்பி இராசையா



**மலர்வு: 16.07.1937 உதிர்வு: 11.01.2006**

அன்பே உருவாக
அறநெறியின் வழிநடந்தீர்
ஆற்றல்கள் மிகப்படைத்து
ஆசானாய் நீர் இருந்தீர்
இங்கிதமாய் கதைக்கின்ற
இயல்பின் இருப்பிடம் நீர்
ஈகைக் குணம் படைத்த
ஈரமுள்ள நெஞ்சினர் நீர்
ஊருக்கும் உதவி செய்யும்
ஊக்கத்தின் பிறப்பிடம் நீர்
எங்களது வாழ்க்கை நலன்
என்னென்றும் காத்தவர் நீர்

ஏங்கி எமைத் தவி விட்டு
ஏனையா நீர் போனீர்
ஐயோவென்றே அழுதும்
ஐயா உன் நினைவு வெள்ளம்
ஒருபோதும் அகலாமல்
ஒலிக்குதையா நெஞ்சகத்தில்
ஓராயிரம் தடவை
ஓதுகின்றோம் உன் பெயரை
ஔவையவள் சொன்ன வழி
ஔடதமாய் வாழ்ந்தவரே!
எஃகுறுதி படைத்த உம்மை
எங்கே நாம் காண்போமோ.....

**உத்தமரே உங்களது ஆத்மாவின் சாந்திக்காக**
**உண்மையுள்ள உங்களது உறவுகள் நாம் வேண்டுகின்றோம்.**

2006-01-11 புதன்கிழமை இறைபதமெய்திய எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவி செய்தோருக்கும் மரணச்சடங்கில் கலந்து அஞ்சலி செய்தோருக்கும் நினைவஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் இரங்கல் செய்தி தெரிவித்தோருக்கும் ஆறுதல் கூறிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (2006-02-10) வெள்ளிக்கிழமை வவுனியாவில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

40A, ஞானவைரவர் கோயில் வீதி, சிவசக்தி கோயிலடி,
2ஆம் குறுக்கு ஒழுங்கை, வவுனியா. அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
024 222 1658 0777242268

மனைவி- பிள்ளைகள்,
மருமக்கள்-பேரப்பிள்ளைகள்,
மைத்துனர் மகேந்திரம் - இந்திராணி தம்பதிகள்.
(சி/47785) (24-32-16-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி எண்ணக் கரு குறித்து ஒருதேசிய விவாதம் அவசியம்

## சிவில் சமூக அமைப்புகளின் மாநாட்டுப் பிரகடனத்தில் வலியுறுத்து

சமஷ்டி எண்ணக்கரு பற்றிய ஒரு தேசிய விவாதத்துக்கான தேவையை சிவில் சமூக அமைப்புகள் வலியுறுத்துகின்றன.

'இலங்கையின் எதிர்காலமும் சமஷ்டி எண்ணக் கருவும்' என்னும் தலைப்பில் மாற்றுக் கொள்கைளுக்கான நிலையம், பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 6 ஆம் திகதி ஒரு தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றிய இம்மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பிரகடனத்திலேயே இவ்வாறு கோரப்பட்டிருக்கின்றது. அந்தப் பிரகடனத்தின் விவரம் பின்வருமாறு:-

'முரண்பாட்டுத் தீர்வுக்கான அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து விவாதிப்பதற்காக 2006 பெப்ரவரி 06, திங்கட்கிழமையன்று கொழும்பில் 25இற்கும் மேற்பட்ட அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒன்றுகூடிய ஆயிரம் பேருக்கு மேற்பட்ட நாம், ஓர் ஐக்கியமான, ஜனநாயக இலங்கையினுள் அனைத்து மக்களினது அபிலாசைகள் மீது கவனஞ் செலுத்துகின்றதும், நிலைத்து நிற்கக் கூடியதுமான அரசியல் தீர்வொன்றை விருத்தி செய்வதற்கு ஒன்றுகூடி உழைக்கும்படி இலங்கையிலுள்ள எல்லா அரசியற் கட்சிகளையும், குழுக்களையும், சமூகங்களையும் வற்புறுத்தி வேண்டுகின்றோம்.

நாம் கடந்த ஆண்டில், இந்தத் தீவின் இன முரண்பாட்டின் தோற்றத்தையும், முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான கடந்தகால முயற்சிகளையும், முரண்பாட்டுக்கு நியாயமானதும் நிலைத்து நிற்கக்கூடியதுமான ஓர் அரசியல் தீர்வுக்குச் சாத்தியமான ஓர்வகை மாதிரியாக சமஷ்டிக்கருத்தையும் ஆராய்ந்து அவற்றை விவாதித்துள்ளோம். இலங்கை எதிர்நோக்குகின்ற குறிப்பிட்ட சவால்களைக் கையாளத்தக்கதாகப் பொருத்தமான முறையில் மாற்றியமைக்கப்பட்ட சமஷ்டிக் கருத்து அத்தகையதொரு தீர்வுக்கான அடிப்படையை வழங்குகின்றதென நாம் நம்புகின்றோம். சுயாட்சியுடன், பகிர்ந்துகொள்ளும் ஆட்சியையும், வேற்றுமையில் ஒற்றுமையையும், மனித உரிமைகள் பன்மைவாதம் மற்றும் ஜனநாயகம் என்பவற்றைப் போற்றிப் பேணுகின்ற ஓர் ஒப்புயர்வற்ற அரசமைப்பினுள் பாதுகாப்பும் உத்தரவாதமும் அளிக்கப்பட்டுள்ள தன்னாட்சி உரிமையையும் ஒன்று சேர்க்க முனைகின்ற சமஷ்டி ஆட்சியானது பல்லின மற்றும் பன்மைப் பண்புள்ள நாடுகளுக்குச் சர்வதேச ரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்ட அரசமைப்பு மாதிரியொன்றாகும்.

அநேக இலங்கையர் சமஷ்டி ஆட்சியின் கருத்துப் பற்றிய அச்சங்களையும், தப்பெண்ணங்களையும் கொண்டுள்ளாரென்பதை நாம் ஒப்புக்கொள்கின்றோம். பகிரங்கமானதும், அறிவூட்டப்பட்டதும், கருத்து வேறுபாட்டை மதிக்கின்றதுமான நாடளாவிய ஒரு விவாதத்தில் இவற்றைப் பற்றிக் கவனஞ் செலுத்தவேண்டும். கடந்த ஆண்டில் நாடெங்கிலுமுள்ள மாவட்டங்களில் இதனைத்தான் நாம் செய்துள்ளோம். எமது அரசியல் தலைவர்களும் சிவில் சமுதாயக் குழுக்களும் அடங்கலாக, இலங்கையர் அனைவரையும் அத்தகைய ஒரு விவாதத்தில் பங்குபற்றும் படியும் இலங்கையில் சமஷ்டி அரசமைப்பொன்றைக் கைக்கொள்ளுதல் பற்றிக் காத்திரமான முறையில் பரிசீலனை செய்யும் படியும் நாம் வற்புறுத்தி வேண்டுகின்றோம்" - என்று உள்ளது.

(எ-க)

# கனடாவில் நடந்த விபத்தில் கொக்குவில் வாசி உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,பெப்.10

கனடா மொன்றியலில் இடம்பெற்ற விபத்தொன்றில் கொக்குவிலைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் 2 பிள்ளைகளின் தந்தையான கனகசபை தபேந்திரன் (வயது 27) என்பவரே பலியானவராவார்.

சம்பந்தப்பட்ட குடும்பஸ்தர், தமது காரிலிருந்து இறங்கி வீதியில் நின்றவேளை, பின்னால் வந்த மற்றொரு வாகனம் மோதியதில் பலியானார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர். (எ-202)

# சாவகச்சேரியில் ஒரே இரவில் நடைபெறவிருந்த கொள்ளைகள் அயலவரின் உதவியால் தடுப்பு

தென்மராட்சி,பெப்.10

சாவகச்சேரி நகரப் பகுதியில் இரு வீடுகளில் கடந்த செவ்வாய்க்கிழமை துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி மேற்கொள்ளவிருந்த கொள்ளை முயற்சி அயலவர்களால் தடுக்கப்பட்டது.

அன்றையதினம் இரவு 10 மணியளவில் பெரியமாவடிப் பகுதி வீடொன்றில் மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் வீட்டினுள்ளவர்களைத் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியுள்ளனர்.

எனினும், வீட்டிலிருந்தோர் இதற்குப் பயப்படாமல் கூக்குரலிட்டுள்ளனர். கூக்குரலைக் கேட்ட அயலவர்கள் சம்பவம் நடந்த வீட்டை நோக்கி ஓடி வந்துள்ளனர். அயலவர்கள் ஓடி வருவதைக் கண்ட கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டனர்.

இதற்கிடையில் சம்பவதினம் இரவு 11 மணியளவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றில் நுழைந்த கொள்ளையர் அங்கு இருந்தவர்களை சோதனையிடப்போவதாகக் கூறி வெளியே அழைத்து வந்தது இக்கொள்ளையர் குழு எவரும் சத்தம் போடக்கூடாது எனக் கூறியுள்ளது. எனினும், இவர்கள் மீது சந்தேகம் கொண்ட வீட்டுக்காரர்கள், கூக்குரலிட்டுள்ளனர். கூக்குரலைக் கேட்ட அயலவர்கள் அங்கு வந்துள்ளனர். இதனையடுத்துத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பி யோடிவிட்டனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரிப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

(எ-117)

## நவாலி வித்தியாலயத்தில் கணனி திருட்டு

நவாலி,பெப்.10

நவாலி மகா வித்தியாலயத்தில் நள்ளிரவு வேளை கதவினை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் கணனி மற்றும் சில ஒலி பெருக்கி சாதனங்கள் என்பனவற்றைத் திருடிச்சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் மேல்மாடிக்குச் சென்ற திருடர்கள் அங்குள்ள அறையின் கதவைக் கூரிய ஆயுதத்தினால் உடைத்து உள்நுழைந்த இவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த கணனியையும் ஒலிபெருக்கி சாதனங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவதினத்துக்கு முதல் நாளிரவு பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் இறைக்கப் பயன்படுத்தப்படும் மோட்டர் இயந்திரத்தைக் கழற்றிச் செல்ல முயற்சித்த சிலர் அது கைகூடாததினால் கைவிட்டுச் சென்றுவிட்டனர் என்றும் -

மறுநாள் காலை இவ்விடயம் பாடசாலை நிர்வாகத்துக்குத் தெரிய வந்ததை அடுத்து அதிபரினால் மோட்டர் இயந்திரம் கழற்றப்பட்டு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும் - ஒரு தகவல் தெரிவித்தது. (எ-100)

# அரச மருத்துவர்கள் பணி நிறுத்தம் தொடர்கிறது

அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பான திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக்குழு அறிக்கையை அமுல்படுத்தக் கோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடர்ந்தும் மேற்கொள்ளும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் கொழும்பு, இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்ட அரச வைத்தியசாலைகள் முற்று முழுதாக ஸ்தம்பித்துப்போயின.

நேற்றுமுன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மருத்துவர்கள் சிலர் கடமையில் ஈடுபட்டிருந்த நிலையிலும் வெளிநோயாளர் பிரிவு பாதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம், இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்ட அரச வைத்தியசாலைகளில் மருத்துவர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தினால் தூரப்பிரதேசங்களிலிருந்து வந்த நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இதேவேளை, தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை வேலை நிறுத்தப் போராட்டம் தொடருமென்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கங்கள் தெரிவித்திருக்கின்றது.



யாழ். லயன்ஸ் கழகம், யாழ் . இந்து மகளிர் கல்லூரியில் நடத்திய ஐ.நா. தினவிழாவில் மாணவிகள் வரவேற்புக் கீதம் இசைப்பதைப் படத்தில் காணலாம். கழகத்தலைவர் லயன்ஸ் பீ.ஆர்.றஞ்சன் உட்படப் பிரமுகர்களும் காணப்படுகின்றனர். [த-70]

# நவாலியில் அறுவடைக்குத் தயாரான நெல் இரவோடிரவாகத் திருடர்களால் அறுவடை

நவாலி,பெப்.10

நவாலி வயலில் அறுவடைக்குத் தயாராகவிருந்த நெல் இரவு வேளை முற்றாக அறுவடை செய்யப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

கடந்த ஒருசில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தச்சம்பவம் குறித்துத் தெரிவிக்கப்படுவதாவது:-

நவாலி அரசடியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தமது வயலில் நெல் விதைத்திருந்தார். இந்த நெல்வயலில் இம்முறை அமோக விளைச்சல் கிடைத்து நெல் அறுவடைக்குத் தயாராக இருந்தது என்று கூறப்பட்டது.

இந்நிலையில் - இரவோடிரவாகக் குறிப்பிட்ட வயலினுள் புகுந்த திருடர்கள் ஒரே இரவில் அறுவடைக்குத் தயாராகவிருந்த நெல் முழுவதையும் அறுவடை செய்து கொண்டு சென்றுவிட்டனர் எனக் கூறப்பட்டது.

இதனையறிந்து நவாலியைச் சேர்ந்த ஏனைய விவசாயிகளும் தமது வயல்களிலும் இப்படியான திருட்டுக்கள் இடம்பெறலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளதுடன், இது குறித்து நவாலி விவசாய சம்மேளனத்திடம் முறையிட்டுள்ளது. (எ-100)

# சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் சமய அறிவுப் போட்டிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,பெப்.10

வண்ணை, சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தினால் வருடம்தோறும் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்படும் சைவசமய அறிவுப்போட்டி, மனனப்போட்டி, செயல்முறைப் போட்டி என்பவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் அடுத்த மாதம் முறையே 12ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறும்.

மேற்படி போட்டியில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14)

# தென்மராட்சிக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு

தென்மராட்சி,பெப்.10

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2006ஆம் ஆண்டுக்குரிய விளையாட்டுப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

விளையாட்டுக் கழகங்களிடையிலான குழு நிலைப் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு வசதியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குழுநிலைப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள கழகங்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறும் அதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் பிரதேச விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் அறிவித்துள்ளார். (த-117)



மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி ஜீவனானந்தா மகராஜின் இறுதிக்கிரியைகள் கடந்த செவ்வாயன்று கல்லடி, உப்போடை வளாகத்தில் நடைபெற்றன. சுவாமியின் திருவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதையும் இறுதிப் பவனி இடம்பெறுவதையும் சுவாமியின் திருவுடலுக்கு இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகள் தீமூட்டுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருமண அழைப்பு

| மணமகன் | | மணமகள் |
|---|---|---|
| வி.விஜயவர்மன் | | மகாதேவா கௌரி |
| [நோர்வே] | | [ஆசிரியை] |

காலம்: நாளை (11.02.2006) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணி தொடக்கம் 12.45 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் திருமணம் நடைபெறவுள்ளது.

இடம்: தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்

முக்கிய குறிப்பு: நேரகாலம் போதாமையால் தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியவில்லை. ஆகவே இந்த அழைப்பை நேரடி அழைப்பாகவும் ஏற்று வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து திருமண விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

M. விஜயரத்தினம் (வேலு)
காட்டுப்புலம்,
தொண்டைமானாறு.

பொ.மகாதேவா (ரதி ஸ்ரோர்ஸ்)
முத்துமாரியம்மன் கோயிலடி,
நெல்லண்டை, தும்பளை,
பருத்தித்துறை.

(இருவீட்டார் அழைப்பு)

(C/47758) T.P.:0776679508



# இன்னும் நீங்கள் தாமதிக்கிறீர்களா ???



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதிலும், (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக் களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான வாய்ப்புக்களையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.

## புதிய பிரிவுகள் ஆரம்பம் : 11.02.2006



இ. லாவண்யா
மீசாலை

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறி இருந்த வேளையில் எனது நண்பிகளில் சிலர் வெளியிடங்களுக்குச் சென்று பல்வேறு உயர்கல்விகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இன்றைய சூழ்நிலையில் என்போன்ற மாணவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று உயர்கல்வியைத் தொடர்வது மிகவும் கடினமானதொரு விடயமாக இருந்தது. இன்றைய நூற்றாண்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்து விளங்கும் கணனித்துறையில் உயர்கல்வியைக் கற்கும் நோக்குடன் இருந்த எனக்கு IIS நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்ட BTEC HND கற்கைநெறி கைகொடுத்து உதவியது.

கணனி சம்பந்தமான அடிப்படை அறிவு எதுவுமற்ற நிலையில் நான் IIS இனுள் நுளைந்தேன். அந்த நிலை இன்று என்னைப் பொறுத்தவரையில் முற்றாக மாறிவிட்டது என்றே கூறலாம். இக்கற்கை நெறியானது முற்றிலும் வேறுபட்ட கற்பித்தல் முறைமையைக் கொண்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களை நாம் கற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதோடு மட்டுமல்லாது அவற்றைத் தக்க தருணத்தில் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்வது, தலைமைத்துவப்பண்பு, தன்னம்பிக்கை மற்றும் குழுவாக இணைந்து செயற்படும் தன்மை என்பவற்றையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

IIS இல் HND கற்கைநெறிக்குரிய அனைத்து வசதிகளும் செவ்வனே செய்துகொடுக்கப்படுகின்றன. சிறந்த அனுபவமும் தராதரமும் கொண்ட விரிவுரையாளர்கள் மத்தியில் இக்கற்கைநெறியை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்குக்கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

BTEC HND
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

# IIS CITY CAMPUS

# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201



உ

# சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய கல்யாண மண்டபம் மங்களகரமான திறப்புவிழா

அகிலமெல்லாம் அருள் பாலிக்கும் அன்னை சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் மேற்கு வீதியிலே அமைக்கப்பெற்றுள்ள கல்யாண மண்டபம் நிகழும் பார்த்திப வருடம் தை 29 ஆம் நாள் (11.02.2006) சனிக்கிழமை தைப்பூசத் திருநாளில் நண்பகல் 12மணி முதல் ஒரு மணி வரையுள்ள மங்களகரமான சுபவேளையில்

**தொழிலதிபர் திரு. சுந்தரம் சிவகுமார்**

(சுந்தர்சன் - மானிப்பாய்)

அவர்களால் திறந்துவைக்க எல்லாம் வல்ல அன்னையின் அருள் கைகூடியுள்ளது. அவ்வமயம் அம்பிகை அடியார்கள் யாவரும் வருகை தந்து கலந்து இந் நிகழ்வை சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

- தர்மகர்த்தா சபையினர்.





卐

# புதுக்கடை திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் 29 ஆம் நாள் (11.02.2006) சனிக்கிழமை பகல் 11.10 மணி முதல் 1.10 மணிவரையுள்ள மேடலக்கினமும் பூச நட்சத்திரமும் கூடிய சுப வேளையில்

## அருள் மோட்டோர்ஸ் அன்ட் வேக்ஸ்

இறைவன் திருவருள் துணைகொண்டு எமது நிலையத்தை ஆரம்பித்து வைக்க உள்ளோம். இந்நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வழக்கம்பரை, தொல்புரம்,
சுழிபுரம்.

உரிமையாளர்
திரு.த.அருள்தாசன்


## தைப்பூசத் திருவிழா

சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் தைப்பூச திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. காலையில் விசேட பூசை, அபிஷேகம், வசந்த மண்டபூசை என்பன நடைபெற்று தேரில் முருகப் பெருமான் வீதி வலம் வருவார். கந்த புராண ஏடுகளும் தேரில் எடுத்து வரப்படும்.

இதேவேளை தற்போது இவ்வாலயத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கந்தபுராணப் படிப்பின் பூர்த்தியும் அன்றையதினம் இடம்பெறவுள்ளது. புராணப் படிப்பு உரையாசிரியர் சைவசித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம் கௌரவிக்கப்படவுள்ளார்.

(த135)

## சிமெந்து விலையேற்றம்

வலி.தென்மேற்கு,பெப்.10

யாழ். மாவட்டத்தில் சிமெந்தின் விலை அதிகரித்துள்ளது. கடைகளில் 625ரூபாவாக விற்கப்பட்ட மிற்சுயி சிமெந்து கடந்த வாரம் முதல் 660 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுவிற்கப்படுகிறது.

இவ்விலை ஏற்றத்தினால் கட்டடங்கள் கட்டுவோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதே வேளை வலி.தென்மேற்கு பகுதியில் மணல், கல் ஆகியவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன. (த-135)

## உழவர்தின விழா

தென்மராட்சி,பெப்.10.

சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல்பராமரிப்பு நிலைய சிறார்களின் 'உழவர் தினவிழா' நாளைமறுதினம் முற்பகல் 10மணிக்கு நடைபெறும்.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும், இந்த நிகழ்வில் பெற்றோர்களுக்கான போட்டி [illegible] பெறும். (த-117)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 12.10.1926 | 23.01.2005 |

**திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி**

திதி: 10.02.2006

மலர்ந்த முகத்துடனும் மாசற்ற மனதுடனும்
எமக்காக வழிகாட்டி ஒளியைக் கொடுத்தீரே!
வல்லவராய் வையமதில் வான்போற்ற
வாழ்ந்த வரலாற்றை எண்ணி வியக்கின்றோம்!
காலம் ஒன்று கடந்து நின்றபோதும்
எம் நெஞ்சங்கள் உம் நினைவால் வாடுதம்மா!

விஜயா ஸ்ரோர்ஸ்,
உடையார்கட்டு. (46500)(19-15-42-51)

- பிள்ளைகள்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 30.12.1941 | 06.02.2001 |

**அமரர் தாமோதரம்பிள்ளை ஜெகநாதன்**

(ஓய்வுபெற்ற பொலீஸ் அத்தியட்சகர்)

திதி: 10.02.2006

பாசமும் நேசமும் காட்டினீர்கள்!
பாதுகாப்பும் தந்தீர்கள்!
எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களே!
உங்கள் துணைக்கு அம்மாவையும் அழைத்துக் கொண்டீர்கள்!
இப்போது இருவரும் இன்றி தனியாகத் தவிக்கின்றேன்!
எப்போதும் துணையாக இருக்க வேண்டுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திக்கும்.

இல-14, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

மகள்: ஜெயவாணி,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/47773)(15,19,42,51)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| பிறப்பு | அழிப்பு |
|---|---|
| 21.11.1990 | 28.12.2005 |

**செல்வன் தம்பிராசா அருள்அசந்தன்**

(கண்ணன்)

இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்துஇடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தாவளை,
இயற்றாலை,
கொடிகாமம்.

குடும்பத்தினரும்
சுந்தரலிங்கம்
(குஞ்சய்யா - மாமா).

(46560)(15-19-42-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப் பாடசாலைகளில் பணியாற்றும்

# நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்கள் முறையீடு செய்ய முடிவு; போராடவும் முஸ்தீபு!

ஒட்டுசுட்டான்,பெப்.10

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் பணியாற்றும் நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாத தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் தொடர்பாக மேன்முறையீடு செய்யவுள்ள னர்.

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தற்போது வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் நிரந்தர நியமனம் கிடைக்கப்பெறாத - பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி வன்னியில் உள்ள மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு - எவ்வித வேதனமும் இன்றி - தொடர்ச்சியாக சேவையாற்றி வருகிறார்கள்.

கணிசமான ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதில், எதிர்பாராத தெரிவுகள் இடம்பெற்று நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தெரிவுகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பது புரியாத புதிராகவும் கவலையாகவும் உள்ளது என நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, பாரபட்சம் காட்டாது அனைத்து தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்க வேண்டும் என்றும் -

நியமனம் வழங்காதவிடத்து அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கப் போவதாகவும் தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

(த-341)

## கணனிப் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

பரந்தன்,பெப்.10

பசுமைப் புரட்சிக்கான நிறுவனத்தால் நடத்தப்பட்ட கணனிப் பயிற்சியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

பயிற்சி ஆசிரியர் திருமதி க.பொன்மணி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட செயலகத் திட்டமிடல் உத்தியோகத்தர் சி.சண்முகநாதன், கணனிப் பயிற்சி நிலையப் பொறுப்பாளர் திருமதி வி.சாருமதி, பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களான இ.விமலகுமார் வி.லதாங்கி ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் நிகழ்த்தினார்.

(த-352-202)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# எதுக்குமே உதவாத நிலையில் ஒட்டுசுட்டான் - புதுக்குளம் வீதி!

ஒட்டுசுட்டான்,பெப்.10

ஒட்டுசுட்டான் - புதுக்குளம் வீதி, கடந்த கால மழையினால் பாதிக்கப்பட்டு போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் உள்ளது. இதனால், மக்கள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

புதுக்குளம், அலகரை, இத்திமடு செல்லும் மக்களுக்கு இவ்வீதி மிகவும் முக்கியமானதொன்றாகும்.

வீதிக்கு குறுக்கே பாயும் அலகரை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றுள்ளதால் எந்த வாகனங்களும் கொண்டு செல்ல முடியாதுள்ளது. அது மட்டுமல்ல ஏனைய இடங்களும் குன்றும் குழியும், சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் துவிச்சக்கரவண்டி கூடக் கொண்டுசெல்ல முடியாத நிலையில் மக்கள் பெரும் அவலமடைகின்றனர்.

மழை நேரங்களில் பாலத்தை மூடி நீர் பாய்வதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு எவ்வித பொருள்களுக்கும் வர்த்தக நிலையங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது. மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலையும் உருவாகின்றது.

அங்கு வாழும் மக்கள் தொழில், கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு விடயங்களிலும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே, இப் பாதையினால் மக்கள் படும் அவல நிலையினைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இதனைச் செப்பனிட்டு உதவவேண்டுமென பொதுஅமைப்புகள் கேட்டுள்ளன. (த-341)

## விளையாட்டு விழா

ஒட்டுசுட்டான்,பெப்.10

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட புனித பேதுருவானவர் பெண்கள் சிறுவர் இல்லத்தினதும் புனித இசிதோர் ஆண்கள் இல்லத்தினதும் இணைந்த விளையாட்டு விழா கடந்த 4ஆம் திகதி நடைபெற்றன.

பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்வில் அருட்பணியாளர் யோசப் ரவீந்திரன், அளம்பில் பங்குத்தந்தை யூட் அமலதாஸ், அன்பு றோஜின் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

(த-341)



கிளிநொச்சி தருமபுரம் மகா வித்தியாலயத்தின் ஒழுக்காற்றுக் குழுவினர் வகுப்புகளுக்கிடையில் வகுப்பறை தூய்மைப்படுத்தல் போட்டியினை நடத்தி வருகின்றனர்.

இதன்படி 2005ஆம் ஆண்டுக்காக நடத்தப்பட்ட போட்டியில் வருடம் முழுவதும் வகுப்பறையினைத் தூய்மையாகப் பேணிய, தரம் - 7சி வகுப்பு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். வகுப்பு மாணவர் அனைவருக்கும் வகுப்பாசிரியருக்கும் பரிசில் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. நிகழ்வில் பாடசாலை முதல்வர் ச.பூலோகராசா, தரம் 7சி வகுப்பாசிரியர் செல்வி ப.ஆனந்திக்குப் பரிசில்வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

# விதைநெல் உற்பத்தி குறித்து 40விவசாயிகளுக்குப் பயிற்சி

பரந்தன்,பெப்.10

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 40 விவசாயிகளுக்கு விதைநெல் உற்பத்திப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

விதைநெல் உற்பத்தித் திட்டத்தின் கீழ் கண்டாவளைப் பிரதேசத்தில் விதைநெல் உற்பத்தி மேற்கொண்ட 20 பேருக்கான பயிற்சிநெறி கடந்த 31ஆம் திகதி ஊரியான் கிராமப் பொதுநோக்கு மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

உலக உணவு விவசாய ஸ்தாபன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஈ.எம்.பால சுப்பிரமணியம் தலைமையில் ஆரம்பமான இப்பயிற்சியில் விதைநெல் உற்பத்தியில் ஏற்படும் பிரச்சினைகள், விதைநெல் பாதுகாப்பு, பராமரிப்பு போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் விவசாயத் திணைக்கள கிளிநொச்சி மாவட்ட உத்தியோகத்தர்கள், விதை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்கள், பண்ணை முகாமையாளர்கள், விவசாயப் போதனாசிரியர்கள் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர்.

(த-352-202)

# இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் விளையாட்டுக் கழகங்களுக்குச் சீருடை

பரந்தன்,பெப்.10

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் விளையாட்டுக் கழகங்களுக்குச் சீருடை வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை புளியங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் மாறன்தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்துரைகளை இளையோர் செயற்பாட்டு நிறுவன நிதிப் பொறுப்பாளர் இயலரசன், வவுனியா வடக்கு விளையாட்டு உத்தியோகத்தர் அமலன், வவுனியா தெற்கு விளையாட்டு உத்தியோகத்தர் வசீகரன், வவுனியா மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுநர் எம்.பி. பர்சூர் ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வில் வவுனியா வடக்கு, தெற்கு பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 20 கழகங்கள் பங்குபற்றின. (த-352-202)



வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழாவில் மாணவர்கள் வரவேற்று அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம். *(த-323)*

# பூநகரிப் பிரிவில் பிரதான வீதிகள் திருத்தப்படாததால் சிரமம்

முழங்காவில், பெப்.10

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல முக்கிய வீதிகள் புனரமைக்கப்படாமல் உள்ளன. இதனால், பிரதேச மக்கள் போக்குவரத்தில் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றனர்.

மன்னார் - சங்குப்பிட்டி, பல்லவராயன் கட்டு - வேரவில் - வலைப்பாடு - பாலாவி, பூநகரி - பரந்தன் ஆகிய பிரதான வீதிகள் நீண்டகாலமாகத் திருத்தமின்றி உள்ளன. சில வருடங்களுக்கு முன்னர் இவ்வீதிகள் செப்புக் கிரவல்கள் போட்டுப் புனரமைக்கப்பட்டன. இவை தற்போது மீண்டும் சேதமடைந்துள்ளன.

மேற்படி பிரதேசங்களின் வீதிப் புனரமைப்புக்கு வேண்டிய கல் தாராளமாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே, இம் மூலப் பொருளைக் கொண்டு மேற்படி வீதிகளைப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யவேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-202-323)

# சிறுவர் நாடகப் பட்டறையில் பங்கேற்றோருக்கு சான்றிதழ்

பரந்தன்,பெப்.10

கிளிநொச்சி மாவட்ட நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்ற சிறுவர் நாடகப் பயிற்சிப் பட்டறையின் நிறைவு நிகழ்வுகடந்த 4ஆம் திகதி பி.ப.4 மணிக்கு இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை அரசியல் துறை [illegible] பொதுச் சுடரினை ஊடகத் துறையைச் சேர்ந்த அறிவன் ஏற்றினார்.

தொடர்ந்து மாணவர்களின் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது. தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சோ.தங்கன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

(த-352)

துணுக்காய் பிரிவிலுள்ள

# குமுதன் குடியிருப்பு மக்கள் அடிப்படை வசதியின்றி அவதி

பரந்தன்,பெப்.10

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமுதன் குடியிருப்பு மக்கள் அடிப்படை வசதிகளின்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

1995 இல் இடம் பெற்ற சூரியக்கதிர் - 1 இராணுவ நடவடிக்கையால் பல்வேறு இடங்களிலிருந்தும் இடம் பெயர்ந்த மக்கள் இக் குடியிருப்பில் வாழ்கின்றனர்.

பத்து வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்து இந்தக்குடியிருப்பில் வசிக்கும் இம் மக்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் இது வரை செய்து கொடுக்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (த-352-202)

## கற்சிலைமடு அ.த.க இல்ல விளையாட்டுப் போட்டி

ஒட்டுசுட்டான்,பெப்.10

கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி அன்று நடைபெறவுள்ளது. விளையாட்டுப் போட்டிக்கானபயிற்சிகள் தற்போது பாடசாலை மைதானத்தில் நடைபெற்றுவருகின்றன. (த-341)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

தையிட்டிபுரம், தெல்லிப்பழை என்னும் முகவரியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை சுதாகரன் என்பவரது தே. அ.அ (780973803 V). வி.அ.அ., சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் 06-02-2006 அன்று யாழ்ப்பாணத்திற்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மருதடியான் மருந்தகம் அல்லது விஜய் றெக்கோடிங் சென்ரர், மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். தொ.பே.0779789137 (46585)

முள்ளிலேன், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அப்புத்துரை சரவணபவன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் யாழ்ப்பாணத்திற்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் 07-02-2006 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் கூறிய முகவரியில் ஒப்படைக்கவும். தொ.பே. 077 9235892, 021 222 2886. (46578)

நாவற்குழி, கைதடியைச் சேர்ந்த தியாகராசா தனுராஜ் என்பவரது தே.அ. அட்டை (841982746V) 30-01-2006 இல் யாழ். நகரில் குமார் முகவர் தபால் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும்.(46583)

## சிறுகுறிஞ்சா இலை தேவை

சிறுகுறிஞ்சா இலை வெட்டிய உடன் உலராமல fresh ஆக தேவை. சிறு குறிஞ்சா வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:- BIOTEC INTERNATIONAL Ltd.
131/ 2, PALALY ROAD, THIRUNELVELY, JAFFNA.
Telephone 021 4590907.
(விவசாயப்பண்ணைக்கு அருகில்)
(46534)

## கொழும்புத்துறை விநாயகருக்கு புதிதாக இராஜகோபுரம்

அரியாலை,பெப்.10

கொழும்புத்துறை மேற்கு, விநாயகர் ஆலயத்தின் இராஜகோபுரத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் இந்த இராஜகோபுரத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவுசெய்ய ஏற்பாடுகள் இடம் பெற்றுவருவதாக ஆலயத்தின் புதிய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (எ-17)

## விற்பனைக்கு

Management Diary கள் மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் புதிய இந்திய வெளியீடுகளான நாவல்கள், சிறுவர் கதைகள் என்பன விற்பனையாகின்றன.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(சி47774)
(21.16.17)

## விளையாட்டு மைதானம் புனரமைப்பு

அரியாலை,பெப்.10

யாழ்ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் விளையாட்டு மைதானம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டு மைதானத்தில் மாரி காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதை தவிர்க்கும் முகமாக, மைதானப்பகுதி கிரவல் போடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக நிலையத்தின் தலைவர் எம்.சுந்தரலிங்கம் தெரிவித்தார். (எ-17)

## அல்லாரையில் பொதுமண்டபம்

தென்மராட்சி,பெப்.10

சாவகச்சேரி அல்லாரைப்பகுதியில் 18 லட்சம் ரூபா செலவில் பொது நோக்கு மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் மேம்பாட்டு அமைச்சினால் வழங்கப்படவுள்ளது.

இக் கிராமத்தில் தும்புத்தொழில் நிலையம் அமைந்துள்ள பகுதியில் இந்த மண்டபம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(த-117)

முருகன் துணை

### இணுவில் கந்தசுவாமி கோயில்
### தைப்பூசம் – மஞ்சத்திருவிழா

காலம்: 2006.02.11 ஆம் நாள் (பார்த்திப வருடம் தை 29) சனிக்கிழமை

முற்பகல்: 10.30 மணி – 1008 சங்காபிஷேகம்
நண்பகல்: 12.00 ,, – விஷேட பூசைகள்
மாலை : 4.30 ,, – சண்முகா அர்ச்சனை
மாலை : 5.30 ,, – திருமஞ்சத்தில் சண்முகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதரராக வீதியுலா வருவார்கள்.

முருகன் அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு, எம்பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(46552)(21.16.17) உபயகாரர்கள், தர்மகர்த்தா சபையினர்.

## DRILLING WORK - EXPRESSION OF INTEREST

DRILLING COMPANY required for constructing sixtteen to twenty tube wells, up to 36 feet deep, in sand. The drillers must be prepared to test water quality and strata performance in the Vanni/Vadamarachchi East Regin. For more information contact before 20/02/06 Gabriel Salas - Australian Red Cross - 73 Kandy Road - Jaffna. Mobile telephone: 0779155526. Land Lines: 212223065 or 2122230666. Alternatively, contact Guillermo Garcia on mobile no. 0773291615

(C/47773)

### Colombo Theological Seminary - Jaffna Center
### கொழும்பு இறையியல் கல்லூரி - யாழ்.நிலையம்

பாடம்: போதக நிருபங்கள்
Pastoral Epistles
விரிவுரையாளர்: கிறிஸ்டி பாலேந்திரா
Christy Balendra
காலம்: மாசி 13-17 காலை 9-2 மணி வரை
இடம்: கொழும்பு இறையியல் கல்லூரி, யாழ். நிலையம்
32/1, விதானையார் வீதி, சுண்டுக்குளி
(46581) (21.16.17)

Restricted 15 Members only in a batch

50% Concession only for this batches

Classes Start on 11.02.2006

MCSE, CCNA, CCNP, CCIE மற்றும் A+ பரீட்சைகளுக்கான இலவச ஒழுங்கமைப்பு

Hardware & Networking பயிற்சிகளுக்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட செய்முறை பயிற்சிக்கூடம்.

100% உள்நாட்டிலோ / வெளிநாட்டிலோ வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

Valuable course materiel Free

100% Practical oriented field training centre

An Indian Engineers study centre

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு
தொடர்பு
நிர்வாகம்

Near Jaffna Hindu College,
Opp Lane to PandiKottu Pillayar Kovil,
K.K.S. Road, Opp Lane to Velankanni Church,
Kasthuriyar Road,
Jaffna.

UNIT Education
16/1, Killnar Lane,
Jaffna.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 04 - 1947



உதிர்வு 21 - 02 - 2005

### திருமதி கதிரவேலு செல்வமணி

திதி: திரயோதசி 10.02.2006 வெள்ளிக்கிழமை

*வாழ்க்கைப் பாதையில் தென்றல் வீசும் வேளையிலே*
*தென்றல் புயலாக மாறி வேரோடு சாய்ந்ததோ?*
*நிழல் கொடுத்தாய் அந்த நிழலில் நாம் உறங்கினோம்*
*இப்போது நீர் இரு விழிகளையும் மூடி உறங்கிவிட்டீர்*
*ஆனால் நாம் இரு விழிகளிலும் கண்ணீர் மல்கி நிற்கின்றோம்.*
*தங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

முகவரி:
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
(சி/47766)
(32-16.17)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கேள்வி அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளரினால் மாவட்டச் செயலகத்தில் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வி பற்றிய முழு விவரங்கள் அடங்கிய ஆவணங்களை இச் செயலகத்தின் களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நேரங்களில் 13.02.2006 இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விகளுக்கான முடிவுதிகதி 15.03.2006 ஆகும். விண்ணப்பங்கள் 14.03.2006 பிற்பகல் 3 மணி வரை வழங்கப்படும். கேள்வி பற்றிய சகல விவரங்களையும் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும்போது பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | வேலை விவரம் | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை (Rs) | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை (Rs) |
|---|---|---|---|
| 1. | வாகன சுத்திகரிப்பு நிலைய மேடை அமைத்தல் | 250 | 1950 |
| 2. | தேர்தல் அலுவலக பக்கமுள்ள மலசலகூடம் திருத்தியமைத்தல் | 250 | 400 |
| 3. | நலன்புரிச்சங்க சிற்றுண்டிச்சாலை திருத்த வேலைகள் | 250 | 1200 |
| 4. | பிரதான கட்டடத் திருத்த வேலைகள் | 250 | 1500 |
| 5. | நிலக்கீழ் காப்பறை திருத்த வேலைகள் | 250 | 50 |
| 6. | தாபனக்கிளை திருத்த வேலைகள் | 250 | 1200 |
| 7. | காணி சுவீகரிப்புக்கிளை திருத்த வேலை | 250 | 600 |
| 8. | இலங்கை வங்கி கச்சேரிக்கிளை திருத்த வேலை | 250 | 200 |
| 9. | மாநாட்டு மண்டபத் திருத்த வேலைகள் | 250 | 4100 |
| 10. | வரைபடப் பலகை, அறைகளுக்கான இலக்க வேலை | 250 | 260 |

மாவட்ட கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
06.02.2006
(சி-47775)
(21.16.17)

க.கணேஷ்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,
தலைவர்,
மாவட்டக் கேள்விச் சபை

புத்தாண்டில் ASIAN-CSC வழங்கும் கணினி கற்கைநெறிகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இம்முறையும் 7வது தடவையாக நடைபெறுகின்றது. இப்பரீட்சைகள் பொது அறிவு மற்றும் O/L பாடத்திட்டத்தை சார்ந்ததாக அமையும். தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வினாத்தாள்களை தெரிவு செய்யலாம்.

MEGA 2006
Win 75% Scholarship

குறிப்பு :
- ஒருவர் ஒரு முறை மட்டுமே பரீட்சை எழுதலாம்.
- ஒவ்வொரு முறையும் வினாத்தாள்கள் வெவ்வேறாக அமையும்.
- இம்முறை பரீட்சைகள் எமது பயிற்சி நிலையங்களில் நடைபெறும்.



Registered with Tertiary and Vocational Education Ministry

ஒரு மணித்தியாலம் மட்டுமே நடைபெறும் சிறப்புத்தேர்வை ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் 2-02-2006 தொடக்கம் 16-02-2006 வரையான காலப்பகுதியில் எழுதி 75% வரையிலான புலமைப்பரிசிலினை பெற்றுக்கொள்ளலாம் மேலதிக விபரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள ASIAN-CSC கிளைகளை நாடுங்கள்.

### ASIAN COMPUTER SYSTEMS

யாழ்ப்பாணம் : 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 5677
யாழ்ப்பாணம் : CSC - 101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel : 021-222 8196
சுன்னாகம் : 108, K. K. S. வீதி, (Jet Motors) சுன்னாகம். Tel:071-2501589
நெல்லியடி : கொடிகாமம் ரோட், நெல்லியடி. Tel : 077 - 3122198
சாவகச்சேரி : கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3039587

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகப்பெரிய கெரில்லா கடற்படை!

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் வளர்ச்சி தொடர்பாக கடந்த 7ஆம் திகதிய 'டெய்லிமிரர்' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இது.

விடுதலைப் புலிகளின் பல கடற்புலி உறுப்பினர்கள் அண்மைக்காலமாக பயிற்சிகளை முடித்து வெளியேறுகின்றனர்.

மறவன் மற்றும் திருவடி பயிற்சி முகாம்களிலிருந்து பயிற்சிகளை முடித்து வெளியேறும் நிகழ்வில் முக்கிய கடற்புலிகளான குகன், செஞ்சீரன், விநாயகம், மோகன், மகேந்திரன், மங்களேசன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ள நிலையில் உலகின் மிகப்பெரிய - பயங்கரமான கெரில்லா கடற்படையாக இருக்கும் விடுதலைப் புலிகளின் கடற்படைக்கு அவர்கள் பலரை இணைத்து வருகின்றனர்.

இஸ்ரேலியத் தயாரிப்பான டோராப் படகைக் கொண்டு பெண் கடற்புலியொருவர் அண்மையில் சிறிலங்கா கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தி பெரும் அழிவை ஏற்படுத்தியிருந்தார்.

பூகோள ரீதியாக தமிழீழத்தின் பாதுகாப்பானது கடலுடன் தொடர்புபட்டுள்ளது என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எண்ணுகிறார்.

தங்களின் கடற்படை, பலம்வாய்ந்ததாக இருந்தாலே தங்களால் கைப்பற்றப்பட்டிருக்கும் தரைப் பகுதியினைப் பாதுகாக்க முடியும் என்றும், எதிரியை விரட்டியடிக்க முடியும் என்றும், அவர் நம்புகிறார்.

விடுதலைப் புலிகளின் கடற்படையானது படிப்படியாக வளர்ச்சிபெற்று வருவதற்கு இதுவே காரணம்.

பிரபாகரன் மற்றும் அவரின் சகாக்கள் பலருக்கும் கடலுடன் வரலாற்று ரீதியான பிணைப்பும் உள்ளது.

விமான ஓடுபாதையை விட பிரபாகரனின் மனதை நெருங்கியது கடலாகும்.

விடுதலைப் புலிகளிடம் தொடக்கத்தில் சில மீன்பிடி இழுவைப் படகுகளும் கண்ணாடியிழைப் படகுகளுமே இருந்தன. இவற்றைப் பயன்படுத்தியே மக்களையும் பொருள்களையும் வடக்கிலிருந்து தென்னிந்தியாவுக்கு கொண்டு சென்று -கொண்டு வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால், இன்று அவர்கள் ஆயுதங்கள் பொருத்தப்பட்ட ஆயுதக்கப்பல்கள் மட்டுமல்லாது சரக்குக் கப்பல்களையும் பயன்படுத்தும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளனர். கடந்த சில வருடங்களில் அவர்கள் துரித வளர்ச்சியடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச கப்பல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக விடுதலைப் புலிகளின் கே.பி. என்பவர் உள்ளார். கப்பல்களில் விடுதலைப் புலிகளுக்குத் தேவையான பொருள்கள் கொண்டுவரப்படுமாயின் அதன் செயற்பாடுகளை சூசை கவனிக்கிறார்.


கே.பி.மற்றும் சூசை ஆகியோரின் செயற்பாட்டினால் இன்று விடுதலைப் புலிகளின் கடற்படையானது போராளிகள், மாலுமிகள், கப்பற் பொறியியலாளர்கள் மற்றும் கப்டன்கள் என வளர்ச்சி கண்டுள்ளது.

கடற்புலிகளின் பொறுப்பாளராக 1991 ஆம் ஆண்டு சூசை நியமிக்கப்பட்டார். இவரின் செயற்பாடுகளுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பக்கபலமாக இருந்துள்ளார்.

இதன் காரணமாக யுத்தத்தில் நீண்ட காலத்திற்கு முன்னர் ஏற்பட்ட காயத்திற்காக சூசைக்கு வெளிநாட்டில் சிகிச்சையளிக்கவும் விடுதலைப் புலிகளின் தலைமை முன்வந்தது.

விடுதலைப் புலிகளின் கப்பற் பலமானது 10 முதல் 15 வரையாக உள்ளது என்று டாக்டர் விஜய் சக்குஜா கடந்த ஆண்டு மதிப்பீடு செய்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் ஆழ்கடல் செயற்பாடுகள் சிங்கப்பூரிலிருந்து சோழன் கப்பல் வாங்கப்பட்டதையடுத்தும் கேரளாவில் கடற்புறா கப்பல் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்தும் 1984 ஆம் ஆண்டு தொடங்கின.



### 25 கப்பல்கள்

அவர்களிடம் தற்போது நீண்ட தூரம் பயணிக்கக் கூடிய 11 கப்பல்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடைசியாக தென்னாபிரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கொள்கலன் கப்பலுடன் அவர்களின் கப்பல்கள் எண்ணிக்கை 23 ஆக உள்ளது என்று புலனாய்வுப் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் கப்பல்கள் கடந்த காலத்தில் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்திருந்தன. சீன ஆயுதங்களை எடுத்து வருகையில், பல்லவன் கப்பல் சென்னையில் வைத்துக் கைப்பற்றப்பட்டது.

1990 ஆம் ஆண்டு சன்பேர்ட் கப்பல் மலேசிய அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டது. ஹொரிசன் கப்பல் 1996 ஆம் ஆண்டு விமானப் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானது.

அண்மையில் கப்பலைச் சோதனையிட அனுமதியளிக்காமையினால் சோரின் மற்றும் கொய்மார் ஆகிய கப்பல்கள் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதல்களுக்கு இலக்கானது.

மரம், அரிசி, உரம் போன்றவற்றைக் கொண்டு செல்வதில் இவர்களின் கப்பல்கள் ஈடுபடுகின்றன. சில கப்பல்களில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் விடுதலைப் புலிகளின் பகுதிகளுக்குக் கொண்டு வரப்படுகிறது.

உக்ரெய்னிலிருந்து ரி.என்.ரி., ஆர்.டி.எக்சும் கம்போடியாவிலிருந்து சாம் - 7 உம் கப்பல்களில் கொண்டுவரப்பட்டதாக தகவல்கள் உள்ளன.

பல படகுகள் ஒன்றாக இருக்கின்றன. அவற்றில் ஒன்று திடீரென கடற்படையின் ராடர் இயந்திரத்தில் தெரியத்தக்க வகையில் வந்து உடனடியாக தாக்குதலை நடத்திய பின்னர் ஒவ்வொன்றும் திசைக்கொன்றாக செல்வதால் எந்தப் படகிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதென்பதை அடையாளம் காண்பது கடற்படையினருக்கு சிரமமாக உள்ளது.

இது விடுதலைப் புலிகளின் தாக்குதல் முறைகளில் ஒன்றாக உள்ளது. இவர்களின் டோராப் படகுகளும் ஏனைய படகுகளும் தொழில்நுட்ப ரீதியில் அதிகம் முன்னேறியவையாக உள்ளன.

15 விநாடிகளுக்குள் புலிகளின் வெடிபொருள் நிரப்பிய படகுகள் வந்து தாக்குதலை நடத்துகின்றன. விடுதலைப் புலிகள் தங்கள் படகுகளில் குறைந்தபட்சம் இரண்டு 80 குதிரைவேக என்ஜின்களைப் பொருத்தியுள்ளனர்.

### திருப்பு முனை

1993 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்குத் திருப்புமுனையாக அமைந்தது. பல்வேறு தாக்குதல்களினால் கடற்படையின் ரோந்துச் சேவைகள் வலுவிழந்திருந்தன.

இஸ்ரேலிய ஆயுதங்கள் பொருத்தப்பட்ட படகுகளைக் கொண்டு விடுதலைப் புலிகள் டோரா மற்றும் சுப்பர் டோராப்படகுகள் மீது தாக்குதல்களை நடத்தினர்.

1990 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் முதலாவது கடற்கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது கடற்படையின் எடிதார் கப்பல் தாக்குதலுக்கு இலக்கானது.

ஓராண்டிற்குப் பின்னர் இதேபோன்றதொரு தாக்குதலுக்குக் கடற்படையின் அபித கப்பல் இலக்கானது.

யுத்த நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் விமான ஓடுபாதையை அமைத்துள்ளமை பற்றிக்கவனம் செலுத்துபவர்கள் விடுதலைப் புலிகளின் கடற்படைப் பலத்தைப் பற்றி அவ்வளவாகக் கவனம் செலுத்துவதில்லை.

எனினும், விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதையை ஓரிரு நிமிடங்களில் குண்டு வீசித் தகர்த்து விடலாம் என்றும் அவர்களின் விமான ஓடுபாதை குறித்த விவாதத்திற்கு பதிலளிக்கும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### கடற்பலம் அதிகரிப்பு

யுத்த நிறுத்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் விடுதலைப் புலிகளின் கடற்பலமானது தற்போது அதிகரித்து வருகின்றது. கண்காணிப்புக் குழுவின் தலைவராக இருந்த ரிக்வே டெலெப்சன் விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர் என்ற குற்றச்சாட்டு இருந்தது.

விடுதலைப் புலிகளின் கடற்பலத்தை கண்கூடாக அறிந்திருந்த அவரால் தனது பதவிக்காலம் முடிந்து வெளியேறும் போது கூட அதுபற்றிய கேள்விக்கு பதிலளிக்க முடியாது போனது. சாலை மற்றும் முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் கடற்படை தங்களின் செயற்பாடுகளை பலம் மிக்கதாகக் கொண்டு நடத்துகிறது.

இது தனது எண்ணிக்கையை மட்டும் அதிகரித்துச் செல்லவில்லை. சிறிலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்புப் பார்வையிலிருந்து கப்பல்களையும் அப்புறப்படுத்துகிறது. ஒரு கப்பலை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டுசெல்வது இலகுவான முறையாக இருந்தாலும் இதற்கென அதிக நேரம் வேலை செய்தாக வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகள் அனேகமாக கடும் நடவடிக்கைகளை எடுக்கின்றனர். 2003 ஆம் ஆண்டு பூ யுவான் யா - 225 எனும் பெயரைக் கொண்ட சீன மீன்பிடி இழுவைப் படகின் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

இதில் பயணம் செய்த 26 பேரில் 9 பேரே காப்பாற்றப்பட்டனர். பூ யுவான் யா - 225 ஐக் கடற்படையினரே பயன்படுத்தி புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்று விடுதலைப் புலிகள் நம்பினர்.

கடற்படையினரைப் போன்று விடுதலைப் புலிகள் தங்களின் உறுப்பினர்களைக் கடற்கரையோரம் நிறுத்தி வைப்பதில்லை.

அதேபோன்று அவர்களை அதிக இடைவெளியிலும் நிறுத்துவதில்லை. அப்படிச் செய்தால் அவர்களால் விரைவில் தாக்குதல்களுக்கு ஒன்று சேர்வது இயலாமல் போகும்.

### கடற்புலிகளின் புலனாய்வுத்துறை

கடற்புலிகளிடம் அவர்களின் புலனாய்வுத்துறையும் உள்ளது. அவர்களின் சுழியோடிகளினால் கடற்படை முகாம்கள் பற்றிய தகவல்களை அறியமுடியுமாக உள்ளதுடன், மூழ்கும் கடற்படைக்கப்பலிலிருந்து தேவையானவற்றைப் பெற முடியுமாகவும் உள்ளது. அவர்களின் நீர்மூழ்கி ஸ்கூட்டர்கள் பலவகையிலும் அவர்களுக்கு உதவுகிறது. கடற்புலிகளின் கப்பல்களில் ராடார் வசதிகள் இரவு நேரங்களில் பயணிப்பதற்கான வசதிகளுடன் தரையுடன் சம்பந்தப்பட்டதான ராடார் வசதிகளையும் கொண்டுள்ளது.

ஆள்களை ஏற்றியிறக்கும் நடவடிக்கைகளிலும் கடற்புலிகள் பெரும் பணியாற்றுகின்றனர். சிறிலங்காப் படையினரால் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தாக்கப்படுகையில் அவர்கள் கரையோரத்திற்கு வரும்போது கடற்புலி உறுப்பினர்கள் அவர்களை அங்கிருந்து வேறு இடங்களுக்குக் கொண்டு செல்கின்றனர்.

2000 ஆம் ஆண்டு கடற்புலிகள் திருமலை கடற்படை முகாமிற்குள் ஊடுருவி பெரும் சேதத்தை ஏற்படுத்தினர். கடந்த இரு தசாப்தங்களாக விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் பல மோதல்கள் ஏற்பட்டுள்ளன. இரு பக்கங்களிலும் பெருமளவு உயிரிழப்பும் பொருள் இழப்பும் ஏற்பட்டுள்ளன.

(நன்றி: புதினம்)

# சுபகாரியங்கள் செய்வதற்கு உகந்த நன்னாள் தைப்பூசம்

பண்டைக்காலம் தொடக்கம் இந்து மக்கள் அனுஷ்டித்து வரும் புண்ணிய தினங்களில் ஆழ்ந்த அர்த்தமுள்ள கருத்துக்கள் புதைந்துள்ளன. இந்தவகையில் 'தைப்பூசம்' ஒரு சுபதினமாகும். இந்த நல்ல நாளில் எந்த ஒரு சுபகாரியத்தையும் செய்யலாம்.

இருபத்தொரு நட்சத்திரங்களுள் பூசம் அல்லது புஷ்யம் 8ஆவது ஆகும். தை மாதத்தில் பூச நட்சத்திரம் வரும் நாள் அனேகமாக நிறைமதி நாளாக இருக்கும். இதனை புண்ணிய நாளாக இந்துக்கள் கொண்டாடு வர்.

தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதியை பூச நட்சத்திரத்தின் தேவதை என்பர். பிரகஸ்பதியை அறிவின் தேவதை என இந்துக்கள் நம்புவதால் பூச நட்சத்திரத்தை வணங்கினால் பிரகஸ்பதியின் அருள் கிடைக்கும் என்பர். தைப்பூச நன்னாளில் புண்ணிய நதியில் நீராடினால் அதிக புண்ணியம் கிடைக்கும்.

தைப்பூச நன்னாளில் புதிதாய் விளைந்த தானியக் கதிர்களை உழவர்கள் வீட்டிற்கு எடுத்து வருவார்கள். இது 'புதிது எடுத்தல்' எனப்படும். வீட்டில் சேர்ந்த நெல் மணிகளைக் கடவுள், தேவர்களுக்கு அர்ப்பணித்து மகிழ்வார்கள். மற்றும் தம்முடன் சேர்ந்து பாடுபட்ட இனத்தவர்கள், நண்பர்கள், ஏழை எளியவர்களுக்கும் கொடுப்பர்.

தைப்பூசம் ஆதிசேடனும் வியாக்கிய பாதரும் காண இறைவன் இன்பத் திருநடனம் ஆடிய நாளாகவும் விளங்குகிறது.

இதனை மாணிக்கவாசகர் 'பதஞ்சலிக்கருளிய பரமநாடகம்' என்று அருளியுள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 'திருவிடைமருதூர்' இத் தைப்பூச விழாவிற்கு சிறந்த தலமாகும். பூச நட்சத்திரத்தை வடமொழியில் திஷ்யம் என அழைப்பார்கள். திஷ்யம் என்பது தைசம் என வரும். தைசம் என்பது தை என மருவி நின்றது.

தைப்பூசத்தின் சிறப்பை உணர்த்தும் வகையில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய தேவாரம் இதுவாகும்.

'தைப்பூசமொன் கண்மட
நல்லார் மாமயிலைக்
தைப்பூச நீற்றான் கபாலீச்
சரம மர்ந்தான்
நெய்ப் பூச மொண்புழுக்கல்
நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதி
யோ பூம்பா வாய்'

தைப்பூச நன்னாளில் முருகனுக்குரிய சிறப்புத் திருநாளாக விழா எடுக்கப்படுகிறது. தமிழகத்தில் குமரக்கடவுளின் திருத்தலங்களான அறுபடை வீடுகள் அமைந்த திருக்கோயில்களில் தைப்பூசத் திருவிழா பக்தி மணம் கமழக் கொண்டாடப்படுவதுண்டு. திருச்செந்தூர், பழனி, திருப்பரங்குன்றம் உட்பட முருகன் திருத்தலங்களில் அன்றைய தினம் அருளொளி துலங்கிப் பிரகாசிக்கக் காணலாம்.

ஈழத்திலும் முருகன் ஆலயங்களில் அன்று தேர்த்திருவிழாக்களும், விசேட அபிசேக பூசை வழிபாடுகளும் நடைபெறும்.

தந்தைக்கு உபதேசித்த ஞானக்குமரனின் சிறப்புடைத் திருவிழா நடைபெறும். அன்று குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி கல்வி ஆரம்பம் செய்து வைக்கும் நிகழ்வுகளும் இடம் பெறும்.

தைப்பூசத் திருநாள் பல அம்சங்களிலும் விசேட அருள் நாளாகும். ✱

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி கிழக்கு,பெப்.10

சாவகச்சேரி ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.20 மணி முதல் நடைபெறவுள்ளது. (எ-122-31)

✱ ✱ ✱

இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் ஆலயத்தில் தைப்பூச திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

புதிர் எடுத்து பொங்கல் மற்றும் விசேட பூசை வழிபாடுகள் இதில் இடம்பெறவுள்ளன. அன்றைய தினம் ஆலய வசந்த மண்டபத்தின் விமான கட்டுமானப் பணியும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (எ-135)

✱ ✱ ✱

வலி.தென்மேற்கு.பெப்.10

பெரிய விளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலயத்தில் தைப்பூச உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

புதிர் எடுத்து பொங்கல் நிகழ்வும் அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகளும் இடம் பெறவுள்ளன. (எ-135)

## நாளை கொழும்பில் கல்வி நிர்வாகப் பரீட்சை

அச்சுவேலி,பெப்.10

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆள்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது. கொழும்பையும் கொழும்புக்கு அண்மையிலும் உள்ள நகரங்களில் அமைந்துள்ள 190 பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறும். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலியில் குதூகல ஆரம்பம் (11-02-2006)
தைப்பூசத்திருநாளில்

## இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்
(குளிரூட்டப்பட்டது)

## திறப்புவிழா அழைப்பு

காலம்: நாளை (11-02-2006) சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 10.30 மணி
திறந்து வைத்தல்: உயர் திரு ச.கைலாசபிள்ளை (நவம்)
(நியூ கமல் செரமிக்ஸ், யாழ்ப்பாணம்)

மங்கள விளக்கேற்றல்:

1. திரு.சு.சிவகுமாரன் - சுந்தர்சன், மானிப்பாய்
2. திரு.மு.இரகுநாதன் - முகாமையாளர், த பினான்ஸ் கம்பனி லிமிட்டட், யாழ்ப்பாணம்.
3. திரு.தி.மாணிக்கவாசகர் - பொறுப்பதிகாரி, பிரதேசசபை, அச்சுவேலி.
4. திரு.சி.சோமகுலசேகரம் - தங்கராசா பிறேமீல் சென்ரர், பருத்தித்துறை.
5. திரு.மா.சிவஞானசுந்தரம் J.P. - நில அளவையாளர், இடைக்காடு.
6. திரு.க.சிவஞானசுந்தரம் - அச்சுவேலி வடக்கு.
7. திரு.ம.ஸ்ரீதரன் - இயக்குநர், அறிவகம் கல்வி நிலையம், அச்சுவேலி.
8. திரு.பி.அருட்பிரகாசம் - விவசாய சம்மேளனத் தலைவர்- அச்சுவேலி மேற்கு.
9. திரு.பே.ஞானப்பிரகாசம்- நர்மதா லொறி உரிமையாளர்.
10. திரு.தா.யோகராசா J.P. - கிராம சேவையாளர்.

ஆசியுரை: "செஞ்சொற்செல்வர்" திரு.ஆறு திருமுருகன் (உபஅதிபர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி).
வாழ்த்துரை: "வில்லிசைப் புலவர்" திரு.நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி J.P.)

தவிர்க்கமுடியாத காரணங்களினால் தனிப்பட்ட அழைப்பு கிடைக்காதவர்களும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று குடும்பசமேதரராய் விழாவில் கலந்துகொண்டு மண்டபத்தை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீடியோ கலாமினி,
அச்சுவேலி.
077-3053080

தங்கள் நல்வரவை நாடும்:
திரு. திருமதி சிவமூர்த்தி - மஞ்சுளாராணி
குடும்பத்தினர்.

(சி/47792)(26-19-16)



## திருமண அழைப்பு



பேரன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பார்த்திபவருடம் தைமாதம் 29ஆம் நாள் நாளை (11.02.2006) சனிக்கிழமை பூச நட்சத்திரம், சித்த யோகமும் இறையருள் கூடிய முற்பகல் 11.10 மணி முதல் 12.45 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

திரு. திருமதி பரமநாதன் பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வன் திருநிறை செல்வன்
**வரதராஜா**

திரு. திருமதி திருநாவுக்கரசு தனலெட்சுமி தம்பதிகளின் புதல்வி திருநிறை செல்வி
**அருந்ததி**

ஆகிய இருவருக்கும்
இறைவன் திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு வட்டு இந்து வாலிபர் சங்க திருமணமண்டபத்தில் திருமணம் நடைபெறவிருப்பதால், தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;
224/24, பத்திரகாளி அம்மன் கோயில் லேன்,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
திரு. திருமதி திருநாவுக்கரசு தனலெட்சுமி
குடும்பத்தினர்.



## கணனி நிறுவனத் திறப்புவிழா

**அன்புடையீர்,** நிகழும் பார்த்திப வருடம் தைத்திங்கள் 28ஆம் நாள் இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 9மணிவரை வரும் சுப முகூர்த்த வேளையில்

## CICS Computer Technologies

எமது புதிய நிறுவனத்தை இல 87.பலாலி வீதி, திருநெல்வேலியில் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கவுள்ளோம்.

**ஆரம்பித்துவைப்போர்**
பேராசிரியர் அ.நவரட்ணராஜா
(தலைவர், விலங்கு விஞ்ஞானத்துறை, விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
க.தேவராஜா (பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
K.K.அருள்வேல் (தலைவர், வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
K.T.பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய தொலைத்தொடர்பு எந்திரி, சிறிலங்கா ரெலிகொம்)

அத்தருணம் வருகைதந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் மிக அன்புடன் அழைக்கின்றோம். தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதவும்.

இல.87, பலாலி வீதி,
திருநெல்வேலி,
தொ.பே: 0777 917610
(46608)(26.16.19)

CICS நிர்வாகத்தினரும், ஊழியர்களும்,
E.mail:cicsjaffna@gmail.com.



வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலகம்,
கரவெட்டி

## கேள்வி அறிவித்தல் - 2006

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலகத்தினால் கீழ்காட்டப்படும் வேலைத்திட்டத்திற்கான கேள்வி கோரப்படுகின்றது.

| இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01 | பொதுச் சேவை | | |
| - | நிலையம் அமைத்தல் - வதிரி | 24 500. 00 | 1000. 00 |

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) பதிவு செய்தவர்கள் கேள்விப்பத்திரங்களைக் கீழ் குறிக்கப்படும் தொகையைச் செலுத்தி 23-02-2006ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்வி பத்திரத்தை கடித உறையிலிட்டு "*பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வடமராட்சி தெற்கு - மேற்கு, கரவெட்டி*" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 24-02-2006ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும், அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக சேர்ப்பிக்கமுடியும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விகள் 24-02-2006 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகம் தரலாம்.
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

*சி.சத்தியசீலன்,*
*பிரதேச செயலர்,*
*கரவெட்டி.*
(சி/47791)(26-16-19)


## பரிசளிப்பு விழா

தென்மராட்சி கிழக்கு,பெப்.10

இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய அதிபர் சு.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இதில் பிரதம விருந்தினராகவும், கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர் சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந்தினராக இளைப்பாறிய அதிபர் திருமதி த.பரமானந்தனும் கலந்துகொள்வர். (எ-122)

## நல்லூர்க் கோட்ட அதிபர் கூட்டம் ஒத்திவைப்பு

நல்லூர்க் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் முன்னர் திட்டமிடப்பட்டிருந்தமைக்கமைய இன்று வெள்ளிக்கிழமை நடைபெற மாட்டாது என்று நல்லூர் கல்விக் கோட்டப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் அறிவித்துள்ளார்.

நல்லூர்க் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் பல அதிபர்கள் கொழும்பில் நடைபெறவுள்ள அதிபர் பரீட்சையில் கலந்துகொள்ளச் சென்றுள்ளதனால் இன்றைய கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாகவும்- அவர் மேலும் தெரிவித்தார். (எ-51)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

வலி.தென்மேற்கு,பெப்.10

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் இருந்த நீர் இறைக்கும் இயந்திரம் கடந்த திங்கட்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது. இந்தத் திருட்டுச் சம்பவம்பற்றி வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலீஸார் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். இந்தத் திருட்டுப் பற்றி யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கும் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (எ-135)

## புராணபடனப் போட்டி

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் அடுத்த மாதம் புராணபடனப் போட்டியொன்றை நடத்துவது என்று தீர்மானித்துள்ளது.

ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு என இரு பிரிவுகளாக இந்தப் போட்டி நடைபெற [illegible] புலவர் சு.செல்லத்துரை இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-155)


## அழைப்பு

## IIS CITY CAMPUS

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் 29ம் நாள் (நாளை 11.02.2006 சனிக்கிழமை) காலை 8.00 மணி தொடக்கம் 9.00 மணி வரையுள்ள சுப வேளையில்
IIS CITY CAMPUS
புதிய வளாகத்தினை திறந்து வைக்கவுள்ளோம்
அத்தருணம் மாணவர்கள், பெற்றோர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முன்னைய முகவரி:
#181, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இயக்குநர்
IIS City Campus
#200, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.



## கண்ணீர்க் காணிக்கை



எமது சக உத்தியோகத்தர் திரு.க.சதீஸ் அவர்களின் அருமைத் தந்தை
**அமரர் செல்லையா கணேசலிங்கம்**
அவர்கள்
08-02-2006 புதன்கிழமை காலமானதையிட்டு பெருந்துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்,
**பிரதேச செயலகம் நல்லூர்.**
(46596)(26-16-19)



FedEx Express அனுசரணையுடனான

## திருமுருகனின் பரிசு மழையில் பரிசு பெற்றோர் விவரம்

1வது பரிசு தங்கப்பதக்கம்-867-கே.கணேசபிள்ளை யாழ்ப்பாணம்.

10 ஆறுதல் பரிசுகள்
01. 295 - Dr.M.K.முருகானந்தம் (பருத்தித்துறை)
02. 974 - S.பாலசுப்பிரமணியசிவம் (வட்டுக்கோட்டை)
03. 977 - கு.யாழினி (கோப்பாய்)
04. 781 - திருமதி கே.சாரதாதேவி (மீசாலை)
05. 867 - எஸ்.சிவசுதன் (யாழ்ப்பாணம்)
06. 985 - கே.அரசரட்ணம் (அரியாலை
07. 836 - ஏ.ஜெயகுணசிங்கம் (முழங்காவில்)
08. 740 - திருமதி ஆர்.புஸ்பராணி (கோண்டாவில்)
09. 280 - பி.காண்டீபன் (பருத்தித்துறை)
10. 788 - பி.யஸ்ரின்யூட் (சுன்னாகம்)

இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது தலைமை நிறுவனத்தில் பரிசளிப்பு நடைபெறும். வெற்றியாளர்கள் குறித்த ரசீதுகளுடன் நேரில் சமூகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம் திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 222 7835


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆப்கானில் குண்டுவெடிப்பு: 13 பேர் உயிரிழப்பு!

ஆப்கானிஸ்தானின் கந்தஹார் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை, மாநில பொலீஸ் தலைமை அலுவலகத்துக்கு அருகில் சக்தி வாய்ந்த குண்டுவெடித்ததில் 13 பேர் பலியானார்கள்; 11 பேர் காயமடைந்தனர்.

குண்டுவெடிப்பில் பலியான 13 பேரில் பெரும்பாலானோர் பொலீஸார். காயமடைந்தவர்கள் கந்தஹார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த)

## நீர்மூழ்கிக் கப்பலில் பயணிக்கிறார் கலாம்

இந்திய கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கி போர்க் கப்பலில் ஜனாதிபதி அப்துல் கலாம் எதிர்வரும் 13ஆம் திகதி பயணம் செய்கிறார்.

விசாகபட்டணத்தில் இருந்து அவர் நீர்மூழ்கிக் கப்பலில் புறப்பட்டுச் செல்கிறார். நீர்மூழ்கிக் கப்பலின் செயற்பாடுகள், நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து நீருக்கு மேல் இருக்கும் குறியீட்டை தாக்குதல், நிலத்தில் இருக்கும் குறியீட்டைத் தாக்குதல் ஆகியவற்றை நேரடியாக கண்காணிப்பதற்காகவே நீர்மூழ்கிக் கப்பலில் செல்கிறார் கலாம். (த)

# நிபந்தனைகளை ஏற்றால் இஸ்ரேலுடன் பேசத்தயார்!

## ஹமாஸ் அறிவிப்பு

ஜெருசலேம்,பெப்.10

தமது நிபந்தனைகளை ஏற்குமானால் இஸ்ரேலுடன் பேசுவதற்குத் தாம் தயார் என ஹமாஸ் அறிவித்துள்ளது.

சமாதானத்தை முன்னெடுப்பதற்காக ஆக்கபூர்வமான வழிகளில் பேச்சுகளை முன்னெடுக்க ஹமாஸ் தயார் என்றும் இதே வழிவகைகளில் இஸ்ரேலும் நேர்மையாக செயற்படும் பட்சத்திலேயே இது சாத்தியமாகும் எனவும் ஹமாஸ் அரசியல் தலைவர் ஹாலீட் மிஷ்ஹால் தெரிவித்துள்ளார்.

செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அவர், ''ஹமாஸ் மீண்டும் வன்முறைகளை ஆரம்பிக்க விரும்பவில்லை. அதனுடைய செயற்பாடுகள் சட்டபூர்வமான வழிமுறைகளிலேயே அமையும்'' என்றும் தெரிவித்தார்.

ஹாலிட் மிஷ்ஹால் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - ''காஸா பகுதிகளில் நீண்டகால அமைதி என்பது 1967 இல் இருந்த எல்லைப் பகுதிகளிற்கு இஸ்ரேல் மீண்டும் திரும்புவது உட்பட எமது கோரிக்கைகளை ஏற்கும் பட்சத்திலேயே சாத்தியமாகும்'' என்றார்.

எனினும், மேற்குக் கரைப் பகுதிகளில் இருந்து இஸ்ரேல் வாபஸ் பெறுவதைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த அந்தநாட்டு இடைக்காலப் பிரதமர் எஹுட் ஒல்மேட் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் தான் வெற்றி பெறும் பட்சத்தில் மேற்குக்கரைப் பகுதிகளில் இஸ்ரேலிய குடியிருப்புகள் விடயத்தில் தற்போதுள்ள நிலைப்பாட்டையே தொடர உள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

முதலில் பலஸ்தீனர்களின் உரிமைகளை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டும். அத்துடன், 1967 இல் தாம் இருந்த எல்லைகளுக்குத் திரும்புவார்கள் என்ற நம்பகத்தன்மையையும் அவர்கள் ஏற்படுத்த வேண்டும். அதன் பின்பே எதுவும் சாத்தியமாகும். என்று அவர் மேலும் கூறினார்.

இதுவரை பலஸ்தீன அரசால் மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதான முயற்சிகளைக் குறை கூறிய ஹமாஸ், கடந்த ஆண்டில் இஸ்ரேலுடன் தொடர்ந்து பொருதி வந்தது. அண்மைய தேர்தலில் அது பெருவெற்றி பெற்ற பின்னர் அது சமாதானத்துக்கு இறங்கி வரவேண்டும் என்று சர்வதேச நாடுகள் அதற்கு அழுத்தம் கொடுத்து வந்தன. இல்லையேல் பலஸ்தீனத்துக்கான நிதி உதவிகள் நிறுத்தப்படும் என்றும் மிரட்டின.

இந்த நிலையிலேயே ஹமாஸ் நிபந்தனையுடனான பேச்சுகளுக்கு இணங்கியுள்ளது. (ம)




உக்ரைன் நாட்டில் வெளியாகும் 'பெஸ் சென்சுரா' பத்திரிகை தனது மூன்றாது ஆண்டு விழாவை வித்தியாசமாகக் கொண்டாடுகிறது. 12.5 அடி நீளம், 8.7 அடி அகலத்துக்கு இராட்சத அளவில் தனது பத்திரிகையை உருவாக்கியிருக்கிறது. பங்கங்களைப் புரட்டிப் பார்கின்றனர் ஊழியர்கள்.

## இஸ்ரேலியப் படையினரால் பலஸ்தீன ஆயுததாரிகள் இருவர் சுட்டுக்கொலை

காஸா,பெப்.10

இஸ்லேுக்கும் காஸா எல்லைப் பகுதிக்கும் இடையில் வைத்து ஆயுதம் தரித்த இரண்டு பலஸ்தீனியர்களைத்தாம் நேற்று சுட்டுக்கொன்றுள்ளனர் என இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

''ஏர்ஸ்'' நுளைவுப் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் இருந்த இஸ்ரேலியப் படையினரைக் குறிவைத்து தாக்குதலில் ஈடுபடத் தொடங்கிய வேளையிலேயே தாம் இவர்களை சுட்டுக்கொன்றனர் என இஸ்ரேல் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இஸ்ரேல் இராணுவத்தினரை நோக்கி கையெறி குண்டுகளை வீசிக் கொண்டு சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாலேயே தாம் திருப்பிச் சுட வேண்டி ஏற்பட்டது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு அல் அக்ஷா தியாகிகள் படையும் பலஸ்தீன உள்ளூர் கிளர்ச்சிக் குழுக்களினதும் இணைந்த தாக்குதல் என உரிமை கோரியுள்ளன. (ம)

## காஸ் சிலிண்டர் வெடித்து 12 பேர் ரஷ்யாவில் பலி!

மாஸ்கோ,பெப்.10

ரஷ்யாவில் செச்சினியா மாநிலத்தில் தலைநகர் குரோஸ்னி அருகே உள்ள கர்ச்சாலோய் என்ற இடத்தில் ராணுவ வீரர்கள் தங்கவைக் கப்பட்டிருந்த 2 அடுக்கு மாடிக் கட்டடத்தில் காஸ் சிலிண்டர் வெடித்ததில் 12 பேர் பலியானார்கள். 22 பேர் காயம் அடைந்தனர். இறந்தவர்களில் பலரும் ராணுவ வீரர்கள். அவர்களில் ஒருவர் பெண். (த)

## கலைஞரை வம்புக்கு இழுத்தால்...!

### விஜயகாந்துக்கு தி.மு.க. எச்சரிக்கை



சென்னை,பெப்.10

கருணாநிதியை வம்புக்கு இழுப்பதாகக் கூறி தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் விஜயகாந்துக்கு தி.மு.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தி.மு.க. பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கருணாநிதியைப் பற்றி விமர்சிக்க இவருக்கு அருகதையும் கிடையாது. யோக்கியதையும் கிடையாது. கருணாநிதி சிறைச்சாலையில் இருந்த நாள்களைக் கணக்கிட்டாலே அதைவிடக் குறைவானதுதான் இவர் கட்சி ஆரமபித்து நடத்தி வரும் நாள்கள்.

தி.மு.கழகமும் அதன் தலைவர் கருணாநிதியும் திறந்த புத்தகம். ஆனால், 125 படங்களில் நடித்த இவர் எந்தெந்தப் படங்களில் நடித்ததற்கு எவ்வளவு பணம் வெள்ளையாக வாங்கினார், எவ்வளவு பணம் கறுப்பாக வாங்கினார், அதன் வரவு - செலவு என்ன அத்னையும் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

இந்த நடிகர் கட்சி நடத்துவதைப் பற்றியோ, அரசியல் செய்வது பற்றியோ நமக்கு எந்த விதமான கவலையும் இல்லை. தேவையில்லாமல் கலைஞரையும் கழகத்தையும் வம்புக்கு இழுத்தால் இவரது வண்டவாளங்கள் எல்லாம் தொடர்ந்து வெளியிடப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

### பிரதான அணிகளை விமர்சிப்பதால்

## எனது உயிருக்கு ஆபத்து!



கோவை,பெப்.10

அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. அணிகளை விமர்சித்துப் பேசுவதால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் நடிகர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டத்தில் இரண்டாவது நாளாக சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள அவர், காந்தி பூங்கா அருகே நடந்த பிரசாரத்தில் புதன்கிழமை பேசினார்.

யாருடனும் கூட்டணி சேரமாட்டேன். மக்களுடன்தான் எனது கூட்டணி. அ.தி.மு.க., தி.மு.க. கட்சிகளுக்கு கடந்த காலங்களில் மாறி மாறி வாக்களித்தும் நாடு முன்னேறவில்லை. இத்தேர்தலில் எனக்கு வாக்களியுங்கள் தமிழகத்தை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்கிறேன்.

என்னை ஆதரிக்கவேண்டும் என்பதை முதன்மைப்படுத்துவதோடு அ.தி.மு.க., தி.மு.க. ஆட்சியின் அலங்கோலங்களையும் சொல்ல வேண்டியுள்ளது. இரு கட்சிகளும் மக்கள் நலனை விட தங்களுடைய சொந்த நலனையே முக்கியமாக நினைக்கின்றன.

இரு அணிகளும் என் மீது ஆத்திரமடைந்து உள்ளன. எனவே என்னைத் தாக்கவும் முயற்சிக்கலாம். இதனால் எனது உயிருக்கு ஆபத்தும் நேரலாம்.

இதற்கெல்லாம் பாதுகாப்பு கேட்டு மக்களிடம்தான் வருவேன் என்றார் விஜயகாந்த். (த)

## பண்ருட்டி இராமச்சந்திரன் புகுந்த கட்சி உருப்படாது!

### சீறிப்பாய்கிறார் நடிகர் செந்தில்

தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவரான பண்ருட்டி இராமச்சந்திரனை கடுமையாக விமர்சித்திருக்கிறார் சமீபத்தில் அ.தி.மு.கவில் சேர்ந்து கொண்ட நடிகர் செந்தில்.

பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போது பண்ருட்டியை விமர்சித்தார் அவர்.

ஜெயலலிதாவை ஜெயிலில் போட வேண்டும் என்று பண்ருட்டி கூறினாராம் உண்மையாகப் பார்த்தால் அவர்தான் ஜெயிலுக்குச் போகவேண்டும். எம்.ஜி.ஆர். எப்படியெல்லாம் நம்பியிருந்தார். அவருக்கே துரோகம் செய்து பணத்தை கொள்ளையடித்தார் பண்ருட்டி.

இவர் எந்தக் கட்சிக்குப் போனாலும் அந்தக் கட்சி உருப்படவேமாட்டாது. அது தான் வரலாறு .- என்று பேசினார் செந்தில்.

இதேவேளை- இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் எம்.ஜி. ஆருடன் இணைந்து ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்களுடனான பேச்சுக்களில் முக்கியநபராகப் பங்கேற்றவர் பண்ருட்டி இராமச்சந்திரன் என்பது குறிப்பிடத்துக்கது. (த)




## 32 அடி உயர கருணாநிதி சிலை!

உலக அரங்கில்

திருச்சி விமான நிலையப் பகுதியில் தி.மு.கவின் 9 ஆவது மாநில மாநாடு எதிர் வரும் மார்ச் மாதம் 3,4,5, ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

மாநாட்டின் முகப்பு, 2 மலைகளுக்கு நடுவே சூரியன் உதித்து வருவதுபோல அமைக்கப்படுகிறது. இதில் தந்தை பெரி யார், அண்ணா, கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், மு.க.ஸ்ராலின் ஆகியோரின் உருவப் படங்கள் அமைக்கப்படுகின்றன.

கருணாநிதி சிலை பிரமாண்டமான முறையில் 32 அடி உயரத்தில் தயார் செய்யப்படுகிறது. இதற்கான பணி நேற்றுத் தொடங்கியது. (த)

## பாரத மாதாவின் நிர்வாண உருவம்; இந்தியாவிலும் ஓர் 'ஓவியச் சர்ச்சை'!

### ஓவியரைக் கைது செய்யக்கோருகிறது பா.ஜ.க.

பாரத மாதாவின் உருவத்தை நிர்வாணக் கோலத்தில் வரைந்த ஓவியர் ஒருவருக்கு எதிராக இந்தியாவில் கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன. இதனை வரைந்த ஓவியர் எம்.எவ்.ஹுசைன் என்பவரை கைது செய்யுமாறு பாரதிய ஜனதாக் கட்சி கோரிக்கை விடுத்திருக்கிறது.

இந்துக் கடவுளர்களின் உருவங்களையும் நிர்வாணக் கோலத்தில் வரைந்தாராம் ஹுசைன்.

டென்மார்க் பத்திரிகை ஒன்று, நபிகள் நாயகம் பற்றி வரைந்த கேலிச் சித்திரம் காரணமாக உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை ஒரு நல்ல இஸ்லாமியர் என்ற முறையில் ஓவியர் ஹுசைன் அறிந்திருக்க வேண்டும். அவர் தொடர்ந்து இந்துக்களை புண்படுத்தி வருவதைத் தவிர்க்கவேண்டும். மதசார்புடையவர்களிடையே அவர் பகைமை வளர்த்து வருகிறார். இந்துக்களையும் இந்தியர்களையும் தொடர்ந்து புண்படுத்தி வரும் அவரைக் கைது செய்து தண்டிக்கவேண்டும் என்கிறது பா.ஜ.க. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களகரமான திறப்பு விழா

## MAK Cost Cutter Super market

உங்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

அன்றாட பாவனைக்குத் தேவையான
பொருட்கள் அனைத்தையும், ஒரே இடத்தில்,
தரமானதும் நியாயமானதுமான விலையில்
உடன் பெற்றுக்கொள்வதற்கு. நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்...

**MAK COST CUTTER SUPER MARKET.**
# 484, HOSPITAL ROAD, JAFFNA.
T.P NO: 021 222 9777.
E-mail: mak_cost@yahoo.com.

# IRATHINAS HOTEL

இல.33, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 8195. Fax:021 222 8195

அன்புடையீர்!

நிகழும் பார்த்திப வருடம் தைத்திங்கள் 28ஆம் நாள் இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை காலை 7மணி முதல் 8.10மணி வரை வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட இறட்ணாஸ் ஹோட்டலை ஆரம்பிக்க உள்ளதால்அத்தருணம் தாங்கள் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குணரட்ணம் செல்வராஜா
குடும்பத்தினர்.(இறட்ணாஸ்)




திருமுறை ஓதல்:-
திரு.தம்பையா தியாகலிங்கம் (J.P)
(S.V.M. முகாமையாளர்)

மங்கள விளக்கேற்றல்:-
திரு.V.இராஜரட்ணம்
(கிளை முகாமையாளர்,
L.I.C லிமிட்டட்)

நாடாவெட்டி திறந்து வைப்பவர்:-
திரு.குலசேகரம் கனகசிங்கம்
(முகாமையாளர், செலான்
வங்கி, யாழ்ப்பாணம்)

பெயர்ப் பலகையினை
திரைநீக்கம் செய்பவர்:-
திரு.துரைசிங்கம் ரகு(R.M)
(வட வலய முகாமையாளர்,
மக்கள் வங்கி)

நிகழ்ச்சி நிரல் அறிவிப்பாளர்:-
K.P.R. நவரட்ணராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலை தெற்கு வசந்தநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

தேர் : 11.02.2006 a.m.
தீர்த்தம் : 12.02.2006 p.m

அம்பிகை அடியார்கள் இவ்வுற்சவங்களில் கலந்து அன்னையின் இஷ்ட சித்திகளைப் பெற்றுப் பேரானந்தம் அடைவார்களாக.

(46617)(34-49-18) -தேவஸ்தானம்.



# தைப்பூசத் திருநாளில் அமுதசுரபியில் அன்னதானம்

அம்பிகை அடியார்களே!

நாளை (11.02.2006) சனிக்கிழமை நயினாதீவு அருள் மிகு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள தைப்பூச மஞ்சத் திருவிழாவைக் காண வரும் அடியார்களுக்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரால் வழமை போல அன்னதானம் வழங்கப்படும் என்பதை பணிவன்புடன் அறியத்தருகின்றோம்.

ஓம் சக்தி துணை

ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை, நயினாதீவு 2. -நிர்வாகம்.

தொ.பே. : 0602213575 ,பதிவு இல. S .236 (சி-47795)(34-49-18)



சீட்டிழுப்பு இல. 1683

Shanida Vasanawa

08.02.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

19 27 42 64 02

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 200945831 இலிருந்து 200962454

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,42,87,200/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,42,87,200/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 37 | 5,000/- | 1,85,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 443 | 1,000/- | 4,43,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,467 | 500/- | 7,33,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,644 | 40/- | 8,65,760/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,554 | 20/- | 4,11,080/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,08,296 | 10/- | 30,82,960/- |
| மொத்தம் | | | 77,21,300/- |
| தங்க நகைகள் , தையல் இயந்திரம் , பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,52,448 | | 82,21,300/- |

தொடர் இல. 300892560 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 பெப்ரவரி 11 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,51,11,100/-

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கள் அடங்கிய பரிசு முதியை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| நுவரெலியா | 200961068-7-65 |
| மொனராகலை | 200948119-4-88 |
| கண்டி | 200956093-2-54 |
| பதுளை | 200961065-4-86 |
| கொழும்பு | 200960030-4-20 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இலங்கராசா (இலங்கை)



கொக்குவில் மேற்கு, கேணியடியில் வசித்த கந்தையா இலங்கராசா நேற்று (09.02.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் மரணச்சடங்கு பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(46620)(34-49-18) நாகேஸ்வரி(மனைவி).

## முருகேசு சின்னையா



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சின்னையா 07.02.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-சின்னத்தங்கச்சி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கதிரவேலு-சின்னாச்சி தம்பதியரின் மருமகனும் நாகம்மாவின் பாசமிகு கணவரும் நடேஸ் (ஜேர்மனி), காலஞ்சென்ற றஞ்சினிதேவி, காலஞ்சென்ற நந்தகுமார், மோகனதாஸ் (சுவிஸ்), கிருபானந்தன், விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), பிறேமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் றாகினி (ஜேர்மனி), ஜெயபாலசிங்கம், ஜெயலட்சுமி (சுவிஸ்), தனுஜா,கேமமாலினி (ஜேர்மனி), றஞ்சித்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

5 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (46601)(34-49-18)

## குண்டுகள் வெடித்தன

பருத்தித்துறை இராணுவ முகாமில் நேற்று பிற்பகல் 4 மணியளவில் பாரிய குண்டுகள் வெடித்ததால் அப்பகுதியில் சில மணி நேரம் பதற்றம் நிலவியது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கும் ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திற்கும் அண்மையில் அமைந்துள்ள இராணுவத்தினரின் காவலரண் களுக்கு பாதுகாப்பாக வைக்கபட்ட குண்டுகளே கால் நடைகளின் நடமாட்டத்தால் வெடித்தது எனத் தெரியவந்ததும் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (3-6-70)


சிங்களம்

பேச, எழுத,வாசிக்க கற்பிக்கப்படும்.
சனி,ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம்:11.02.2006
சனி-முற்பகல் 10மணி பிற்பகல் 3 மணி
ஞாயிறு -முற்பகல் 10 மணி பிற்பகல் 3 மணி
41,றக்கா லேன், சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.
(ACTION FAIM) காரியாலயம் நேர் முன்பாக.
(46614)
(34-49-18)



SAAMSTECH

இன்று நடைபெறவிருந்த நேர் முகப் பரீட்சை 13.02.2006 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இன்று மட்டும் வகுப்புகள் நடைபெறா. (46613) (34-49-18)



மனோகரா யாழ்ப்பாணம்

காதலர்தினத்தை முன்னிட்டு
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
இன்று முதல் இளம் புயல் ரவி, கம்னா நடித்த
இதயத்திருடன்
காட்சி நேரம்: 10.30, 1.30, 4.30, 7.30



நாதன்ஸ் யாழ்ப்பாணம்

அல்டிமேட் ஸ்ரார் அஜித்,
லைலா
மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
புதியநேரம்:
10.30, 2.30





ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்



நாகம்ஸ் சுன்னாகம்

இன்று முதல் சத்தியராஜ் (இருவேடம்)
சங்கவி,ஆனந்தராஜ் நடித்த
அய்யர் I.P.S
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00


# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம் சிவபாக்கியம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (09.02.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் வேலணை மேற்கு, அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

வேலணை மேற்கு,
வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.

(46624)(34-49-18)

## திருமதி புனிதவதியம்மா சண்முகராசா (ரேணுமதி)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதியம்மா (ரேணுமதி) சண்முகராசா 09.02.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை காரைக்கால் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
[illegible]
(சகோதரர்).

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா கணேசலிங்கம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கணேசலிங்கம் அவர்கள் 08.02.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் இரவிச்சந்திரன் (லண்டன்), ரமேஸ், சதீஸ் (பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் பரஞ்சோதி, மகேஸ்வரி, நாகேஸ்வரி, நகுலேஸ்வரி, யோகநாதன், அமரர் சாவித்திரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை நெடுங்குளம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல்10 மணிக்கு கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன்.

69, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (46621)(18-34-49)

## சின்னத்தம்பி கதிரேசு (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)



சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கதிரேசு அவர்கள் நேற்று(09.02.2006) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் விஜயசுகுமாரி (PHM - M.O.H. Office koppay), விஜயசுகுமார்(குடிசார் படவரைஞர், யா/மா/ச), விஜயராணி(பிரான்ஸ்), சரவணபவன்(ஆசிரியர் , மட்டக்களப்பு), சிவகுமார்(பிரான்ஸ்),சசிகுமார் (பிரான்ஸ்), யசிந்தன்(V.N.C.O.E. Vavuniya) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கவேலு(Doha),சசிகலாராணி(PHM - Velanay), முருகையா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் கனீசாந்த் (M-H-C), விஷாலி(பிரான்ஸ்),ஆருதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (46609)(34-49-18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## அருணகிரிநாதன் அருந்ததி

கொம்மாந்தறையைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டினை வசிப்பிடமாகவும் கொண்ட அருணகிரிநாதன் அருந்ததி அவர்கள் 05.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அருணகிரிநாதனின் மனைவியும் பிரதாப்பின் தாயும் வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மகளும் பொன்னுத்துரை - றோசம்மா தம்பதியரின் மருமகளும் சிவசெல்வரட்ணம் பிள்ளை, இந்திராணி ஆகியோரின் சகோதரியும் சுந்தரலிங்கம், லோகநாதன், விக்னேஸ்வரன் லோகேஸ்வரி, கமலநாதன், லிங்கநாதன், இரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.02.2006)வெள்ளிக்கிழமை ஹொலண்டில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

337/1, கண்டி வீதி,
அரியாலை. (46609)(34-49-18)

தகவல்:
லிங்கநாதன் சுசிலா.

## முருகுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை அவர்கள் 08.02.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளையின் அன்பு மனைவியும் இராசேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி, ஈஸ்வரதம்பையா (கனடா), அமரர் நாகேஸ்வரமுத்து, ஈஸ்வரமூர்த்தி(கனடா), கேதீஸ்வரி( கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் நல்லையா (கனடா), குமாரதாசன், வதனி, உத்தரகோசமங்கை, மோகனராணி (கனடா), சிவேத்திரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் நவரதி(கனடா), யசோரதி(சுவிஸ்), செந்தூரன், செல்வரூபி (கனடா), தெய்வரூபி (கனடா), சஞ்சீவன், சுயந்தன்,சோபிகா,அனுஷன், அஞ்சலி (கனடா) வருண்,கவிதன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(11.02.2006)சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.குமாரதாசன்
(பிராந்திய மருந்தாளர்,
மா.சு.ப.பணிமனை,யாழ்ப்பாணம்)

மாவ்வளவு,இடைக்காடு,
அச்சுவேலி.
(46607)(34-49-18)

## க.தவேந்திரன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டு Canada (montreal) வை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த க.தவேந்திரன் அவர்கள் 05.02.2006 ஞாயிற்றுக்கிழமை அகால மரணம் ஆனார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை-கைலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் செல்வரஜனியின் அன்புக் கணவரும் கிர்த்திகா, நிவேதித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா - தங்கரத்தினம் தம்பதியரின் பாசமுள்ள மருமகனும் கெங்காதரன், தவஞானபூரணம், மனோறஞ்சிதமலர், ஞானறஞ்சிதம், தவறஞ்சிதம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(11.02.2006) சனிக்கிழமை Canada (montreal) இல் நடைபெறும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ச.சத்தியமூர்த்தி ஞானறஞ்சிதம் (மச்சான், அக்கா), 18, மேபில் லேன், கொட்டாஞ்சேனை, தொ.பே.: 2436669.

சோதிநாதன் தவறஞ்சிதம் (அக்கா), 86/1, செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு,கொக்குவில். தொ.பே.: 0779080440

(46594)(32-34-49-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ப:- இன்று நோர்வே தூதுவரையும், சுவிற்ஸர்லாந்து தூதுவரையும் கொண்ட தூதுக் குழுவை சந்தித்து கலந்துரையாடியுள்ளோம். இச் சந்திப்பில் முக்கியமாக 22, 23 ஆம் திகதிகளில் தொடங்கவுள்ள பேச்சுகள் தொடர்பான ஏற்பாடுகளை செய்வது தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டது. தற்போதுள்ள களநிலைமைகள், நெருக்கடி நிலைமைகள் பற்றியும் இந்தச் சந்திப்பில் எடுத்து விளக்கியுள்ளோம்.

கே:- ஸ்ரீலங்கா அரச தரப்பு பேச்சுவார்த்தையில் பங்குகொள்ளும் அரச தரப்பினருக்கு மிகப்பெரிய எடுப்பிலே பயிற்சிப் பட்டறைகளை வழங்கி வருகிறது. விடுதலைப் புலிகள் தரப்பில் அவ்வாறான ஏற்பாடுகள் ஏதும் இடம்பெறுகிறதா?

ப:- விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் பேச்சுக்கான குழுவை எமது தலைமைப்பீடம் நியமித்திருக்கின்றது. தலைவரும், தலைமைப்பீடத்தினரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பான போதிய விளக்கங்களை பேச்சுவார்த்தைக் குழுவுக்கு வழங்கியுள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பார்த்து நாம் செயற்படவேண்டிய தேவையில்லை. நாமும் செய்திகளை ஊடகங்களில் பார்க்கின்றோம். பேச்சுவார்த்தைக் குழுவுக்கு அரசு பயிற்சிகளை வழங்குவது நல்ல விடயம். பயிற்சிகளையோ, ஒழுங்குபடுத்தல்களையோ செய்வது மகிழ்ச்சிக்குரியது. அதேநேரத்தில் ஒரு விடயத்தை அரசிடம் முன்வைக்கலாமென நினைக்கின்றேன். பேச்சுகள் என்பது யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றிய முக்கிய விடயமாக உள்ளது. அடி னடிப்படையில் பார்க்கின்றபோது யுத்த நிறுத்த உடன்படிக்கையில் அனைத்து வித முறைகளும் தெட்டத்தெளிவாக, விரிவாக முன்வைக்கப்பட்டுள்ளன; விளக்கப்படுத்தப்பட்டுள்ளன. இதை அமுலாக்கம் செய்வது பற்றிய இணக்கப்பாட்டை உருவாக்குவதுதான் இப் பேச்சுவார்த்தையின் முக்கிய நோக்கம்.

இலங்கை அரசாங்கத்தின் தூதுக்குழுவிடம் ஒரு வேண்டுகோளை விட விரும்புகின்றேன். உண்மையிலேயே எமது தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களும், தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்களும் தற்போது சந்தித்து வருகின்ற கெடுபிடிகள் பற்றி போதியளவில் விளங்கிக்கொண்டு பேச்சுவார்த்தைக்கு வருவதுதான் பொருத்தமாக இருக்கும். கடந்த 57 வருடங்களுக்கு மேலாக ஆக்கிரமிப்பின் கீழும், ஆதிக்கத்தின் கீழும் அல்லலுறுகிறார்கள், துன்பப்படுகிறார்கள் தமிழ் மக்கள். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் வரலாறு, தமிழ் மக்கள் சந்தித்த வாழ்வியல் நெருக்கடிகள், பேரழிவுகள், இடப்பெயர்வுகள்.... இவை பற்றி அரச தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவினர் விளங்கிக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும். தமிழ் மக்களுக்குத் தீர்வை முன்வைக்கின்ற உறுதியான நிலைப்பாட்டோடு பேச்சுவார்த்தைக் குழுவினர் வரவேண்டும். தமிழ் மக்களுடைய சமகால வரலாறையும், ஆக்கிரமிப்பால் ஏற்பட்டிருக்கின்ற விளைவுகள் பற்றியும் விளங்கிக்கொண்டு வரும் போதுதான் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்குமே. பேச்சுவார்த்தை அரங்கம் ஒரு விவாத அரங்கமல்ல. இரண்டு தரப்பும் மனம் விட்டுப் பேசி, உண்மையான நிலைப்பாடுகளை பரிமாறிக்கொண்டு, தீர்வை எட்டுவதற்குத் தான் பேச்சுவார்த்தை மேசை. அதுதவிர விவாதங்களை நடத்தி கருத்துகளுக்கு கருத்துக்கள் வெளிப்படுத்தி, கருத்து முறியடிப்பு சமரை நடத்துகின்ற அரங்கல்ல பேச்சுவார்த்தை மேசை.

அதோடு நீண்டகாலமாக புரையோடிப் போயுள்ள பிணக்குக்குத் தீர்வைக் காணுவதும் எமது மக்களின் அவலமான வாழ்விற்கு தீர்வு காண்பதற்குமான முயற்சிதான் யுத்தநிறுத்த உடன்பாட்டு அமுலாக்கம். அதாவது, எமது மக்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக யுத்தத்தால் பேரழிவைச் சந்தித்து, பாரிய மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்கள். சுனாமிப் பேரலையால் பெரும் அனர்த்தத்தைச் சந்தித்து நிற்கின்றார்கள். எமது மக்களுக்கான மனிதாபிமான பிரச்சினைதான் முக்கியமான பிரச்சினையாக உள்ளது. அண்மைக் காலத்தில் மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள்; கடத்தப்பட்டுள்ளார்கள்; பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு எமது இளம் பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவலமான வாழ்வை எமது மக்கள் சந்தித்த வண்ணம் உள்ளார்கள். நாளாந்தம் இராணுவ அச்சுறுத்தல் காரணமாக மக்கள் நடமாட முடியாத சூழலை எமது மக்கள் சந்தித்த வண்ணம் உள்ளார்கள். இருதரப்பும் சர்வதேச மத்தியஸ்தத்துடன்- அனுசரணையுடன்- உண்மைகளைப் பரிமாறிக்கொண்டு தீர்வுகளை காண்பதே ஒழிய, இரு தரப்பும் கருத்துகளுக்கு கருத்து முறியடிப்புச் செய்கின்ற ஒரு விவாத அரங்கல்ல பேச்சுவார்த்தை இடம் என நான் கருதுகிறேன்.

கே:- தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டமை தொடர்பாக பேச்சுவார்த்தையின்போது அழுத்தம் கொடுப்பீர்களா?

ப:- இன்றும் இவ்விடயம் தொடர்பாக தெட்டத்தெளிவாக வலியுறுத்தியுள்ளோம். பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னர் சாதாரண அப்பாவி மக்கள் கடத்தப்பட்டு மிகுந்த நெருக்குவாரங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். இராணுவத்தினரும், இராணுவத்தோடு சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுவினரும் தான் இக்கடத்தலை செய்திருக்கிறார்கள். இதற்கு உடனடியாகத் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும். சர்வதேச சமூகம் இதில் அக்கறை காட்டவேண்டுமென்பதையும் கோரிக்கையாக விடுத்துள்ளோம். எமது தாயகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள இராணுவ கெடுபிடிகளை முடிவுக்கு கொண்டு வந்து, உகந்த சூழலை உருவாக்க வேண்டுமென்பதையும் இன்றைய சந்திப்பில் வலியுறுத்தியுள்ளோம். குறிப்பாக தொண்டர் நிறுவனத்தின் அப்பாவி மக்கள் கடத்தப்பட்டதன் பாரதூரமான தன்மையை விளக்கியுள்ளோம். எமது மக்கள் இக் கடத்தலினால் கொந்தளிப்பான நிலையை அடைந்திருக்கிறார்கள் என்பதையும், இக் கடத்தல் முயற்சிக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும், பேச்சுவார்த்தை முயற்சிகளில் நியாயபூர்வமாக ஈடுபாட்டோடு நடந்துகொள்கின்ற போக்கை வெளிப்படுத்த வேண்டுமென்பதையும் இன்றைய சந்திப்பில் வலியுறுத்தியுள்ளோம்.

கே:- போர்நிறுத்த உடன்பாடு மாற்றியெழுதப்பட வேண்டும் என்று கொழும்பு ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன. அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகள் பெறுதல் தொடர்பாகவும் பேசப்படலாமெனவும் தெரிவிக்கின்றன. இந்நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் உள்ளதா?

ப:- எமது தேசியத் தலைவரும், நோர்வேயினுடைய உயர்மட்டக்குழு சந்தித்தபோது ஓர் இணக்கப்பாடு காணப்பட்டது. பேச்சுகள் என்பது யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றியதாக அமையவேண்டுமென்பதையே எமது தலைவர் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார். அதன் பின்பு நோர்வே அரசு இலங்கை அரசாங்கத்துடனும் இணக்கப்பாடு கண்டு நோர்வே அரசாங்கம் அனுசரணையாளர்கள் என்ற வகையில் விடுத்த அறிவிப்பு யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பாகவே பேச்சு நடக்கும் என்பதுதான். இதில் எந்த மாற்றங்களும் இருக்குமென்று நான் நம்பவில்லை. தெற்கிலே உள்ள ஊடகங்களின் கருத்துகளை வைத்துக்கொண்டு நாம் ஒன்றும் கூறமுடியாது. இரு தரப்பு, இரு தரப்புக்கிடையே சர்வதேச சமூகம் அனுசரணையாளர்கள் என்ற வகையில் மூன்று தரப்பினருடைய தீர்மானங்கள்தான் நடைமுறைப்படுத்தப்படுமென நான் நம்புகிறேன்.

கே:- யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றிய பேச்சுக்கு காலவரயறையேதும் உள்ளதா? இரண்டு நாட்களில் முடிவுகள் எடுக்கப்படுமா?

ப:- முதல்கட்டமாக நீண்ட காலத்திற்கு பின்பு சந்தித்து பேசவுள்ளோம். இலங்கை அரசாங்கத்தின் தூதுக்குழுவினர் - புதிய தூதுக்குழுவினரை- சந்தித்து கலந்துரையாடித்தான் விடயங்களை உள்ளடக்கி, பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும். முதல் சந்திப்பின்போதுதான் எந்த தீர்மானங்களையும் எடுக்கக் கூடியதாக இருக்குமென நான் நம்புகிறேன்.

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.செயலகத்துக்கு முன்பாகவுள்ள கண்டி வீதியில் போக்குவரத்துப் பொலீஸாரும் நேற்று கடமையில் ஈடுபட்டிருந்தனர். பொலீஸாருக்குத் துணையாக இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ம-7)

## அமைதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைத் தலைவராகக் கொண்ட இந்த அமைதி முயற்சிகளுக்கான செயல் ஊக்குவிப்புக் குழுவில் மேலும் ஆறு அமைச்சர்களும் பிரதி அமைச்சர்கள், அரச பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட செயலாளர்கள், வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், சமாதான செயலகத்தின் அதிகாரிகள் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

இந்தக் குழுவின் கீழ் பல்வேறு உப குழுக்கள் இயங்க வுள்ளன. அரசியல், பாதுகாப்பு, ஊடகம் தொடர்பான விவகாரங்களுக்கு இந்தக்குழு பொறுப் பாக செயற்படும் - என்றார். (க-3)

## அர்த்தமுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:-

அர்த்தமுடைய ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றித்தான் ஜெனீவாவில் பேசப்படும். இந்த விடயம் குறித்து கொழும்பில் இடம் பெற்ற பயிற்சிப் பட்டறை[illegible]போது விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. ஐ.தே.கட்சி அரசில் பேச்சுகளில் கலந்துகொண்ட பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஒஸ்டின் பெர்னாண்டோ ஆகியோர் இதில் கலந்துகொண்டு தமது அனுபவங்களை வழங்கியுள்ளனர்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் திருத்துவது பற்றி ஜெனீவாவில் பேசப்படுமா என்பது பற்றி என்னால் உடனடியாக எதுவும் கூறமுடியாது. ஆனால், முதலில் அர்த்தமுள்ள ஒரு போர் நிறுத்தம் பற்றி நாம் பேசவேண்டியதாயிருக்கிறது. போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இது வரை அவற்றை மீறும் 5464 சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இப்போதும் ஒப்பந்த மீறல்கள் இடம்பெறுகின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் அதைப் பற்றி பேசுவது குறித்து இரு தரப்பு இணக்கப்பாட்டாளர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் புலிகளுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்ப[illegible]ள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறுவதை நாம் நிராகரிக்கிறோம். அரசு, புலிகள் ஆகிய இருதரப்பினருடனும் பேச்சுகளை நடத்தி பேச்சுக்கான அனுசரணையாளர்கள் இதற்கான நிகழ்ச்சி நிரலை வகுத்துள்ளனர். அரசாங்கம் தனித்து எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ள வில்லை. - என்றார்அவர். (க-3)

## அமுலாக்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் நடைமுறைப் படுத்தல்' என்ற அம்சம் பற்றி மேலதிகமாகப் பேசுவது குறித்து சில வட்டாரங்கள் நோர்வே ஊடாக ஒரு யேரசனையைப் பிரேரித்த போதிலும், அதுவும் நிராகரிக்கப்பட்டுவிட்டாகத் தெரிகிறது.

''இரண்டு நாள் பேச்சிலும் ஆக, யுத்த நிறுத்த அமுலாக்கம் - செம்மையாக நடைமுறைப்படுத்தல் பற்றி மட்டுமே பேசப்படும். அதற்கு அப்பால் பேசப்பட மாட்டாது. யுத்த நிறுத்த ஏற்பாடுகளை உறுதியாக நடை முறைப்படுத்துவது குறித்து இணக்கம் காணப்படுவது மட்டுமல்லாமல், காணப்பட்ட இணக்கம் களத்தில் வேகமாகவும், திறமையாகவும், குழப்பமின்றியும் செயல்படுத்தப்படவும் வேண்டும். அது செயல்படுத்தப்படுவதில் தான் அமைதி முயற்சிகளின் அடுத்த நகர்வு தங்கியிருக்கின்றது. யுத்த நிறுத்தம் செம்மையாக செயற்படுத்தப்படாமல் அமைதி முயற்சிகள் தொடரும் என்ற எதிர்பார்ப்புக்கே இடமில்லை.'' - என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

''யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளை செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்து மட்டுமே ஜெனீவாப் பேச்சில் ஆராயப்படும்'' - என்ற தகவலை நேற்று கிளிநொச்சியில் வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் வலியுறுத்திக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-3)

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுமே உத்தேசித்துள்ளன என்று யாழ்.தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. ஏனைய கட்சிகள் மாநகர சபை,நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றுக்குப் போட்டியிடவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் ஒரு மாநகர சபை, 3 நகர சபைகள், 13 பிரதேச சபைகள் என மொத்தம் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெறவுள்ளது.இவற்றில் காரை நகரில் புதிதாக உருவாக்கப்பட்ட பிரதேச சபைக்கு இந்த ஆண்டே முதல்முதலாக தேர்தல் நடைபெறுகின்றது.

1998 ஆம் ஆண்டு தேர்தல்நடைபெற்றதன் பின்னர் தற்போதே யாழ். மாவட்டத்தில் மீண்டும் தேர்தல் நடத்தப்படுகின்றது. ஆனால், ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் பதவிக் காலம் 4 ஆண்டுகள் மட்டுமே.

இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ்.மாநகர சபை உட்பட 2 சபைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியும் 10 பிரதேச சபைகளை ஈ.பி.டி.பி. கட்சியும் 2 நகர சபைகள் உட்பட 3 சபைகளை புளொட்டும் ஒரு நகர சபையை ரெலோவும் கைப்பற்றின. கூட்டணி தான் போட்டியிட்ட 2 சபைகளிலும் வெற்றிபெற்றது.

குடாநாட்டின் 16 சபைகளுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கும் தேர்தல் அப்போது நடத்தப்பட்டது. அதனையும் புளொட் கைப்பற்றியது.

அதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கில் மீண்டும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அரசியல் சூழ்நிலைகள் காரணமாக அவைகள் ஒத்திவைக்கப்பட்டன. 6 மாதங்களுக்கு ஒரு தடவை ஒத்திவைக்கப்பட்டு வந்த அந்தத் தேர்தல் 4 ஆண்டுகளின் பின்னர் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ரத்துச் செய்யப்பட்டது. புதிய தேர்தலுக்கான அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் யாழ்.மாநகர சபைக்கு மாவட்ட பொது அமைப்பின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் தலைமையில் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ம-7-190)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசலட்சுமி நவரத்தினம் (அச்சம்மா)



மூல்லாத்தனை, தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் கொக்குவிலை தற்காலிக முகவரியாகக் கொண்டவருமான திருமதி ந.இராசலட்சுமி 05.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், கதிர்காமநாதன் மற்றும் விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயும் பத்மாதேவி (கொக்குவில்),வரதலட்சுமி (லண்டன்),ஜெயவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் நவரூபன்-கல்பனா (கனடா), தர்சன்- வித்தியா (லண்டன்) மற்றும் பிரான்ஸில் வசிக்கும் காவேரி, பிரகதீஸ், உமையாள் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றிஸ்னியின் (கனடா) பூட்டியும் திருமதி பொன்னுலட்சுமி சின்னையா, திருமதி அன்னலட்சுமி - விஸ்வலிங்கம் (கனடா), சிவானந்தம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (10.02.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(46627) (18-34-49)

29,குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
தொ.பே 0712500904, 0773604328

தகவல்:
ந.விஜயகுமார் (மகன்).

LOGIC
A/L 2008, 07
R.S. சந்திரன்
Sat., Sun. 8, 9 a.m.
கீன் - திருநெல்வேலி
ராகவன் - சங்கானை

தும்பலில் கோவிந்தாவிற்கு
இது இடமல்ல
8 ஆம் பக்கம்
பார்க்க

இலவச வழிகாட்டி மற்றும் சான்றிதழுடன்
சிங்கள வகுப்பு
முழு விவரம் 4 ஆம் பக்கத்தில்

## மரண அறிவித்தல்

### திருமதி தணிகாசலம் தவமணி

திருமதி தணிகாசலம் தவமணி அவர்கள் நேற்று(09.02.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் க.தணிகாசலம் (ஓய்வுபெற்ற புகையிரத பொதிப் பரிசோதகர்) அவர்களின் மனைவியும் த.சண்முகலிங்கம் (ஆசிரியர், யா/வட்டு இந்துநவோதயக் கல்லூரி பௌதிகவியல் வலய ஆளுகைச் சபை உறுப்பினர் வலிகாமம் வலயம்) அவர்களின் தாயும் திருமதி இரத்தினேஸ்வரியின் மாமியும் ச.நிசாந்தனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.02.2006)வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளளவும்.

(சி-47802) (18-34-49)

தகவல்:
த.சண்முகலிங்கம்(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.